

# செல்வ மலர்

# Selva Malar

2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகமயம்



காரைநகர் திக்கரை முருகப்பெருமான்
திருவடிகளுக்கு இம்மலர்
சமர்ப்பணம்

வினை தீர்க்கும் வேலவன்
விரிமயில் வாகனன்
எனை ஆளும் திக்கரை
எழில் குகன்மோகன்

- பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்



மண்ணுலகில்
20.10.1938

விண்ணுலகில்
27.05.2010

# அமரர் செல்வதி சம்பந்தன் அவர்கள்
# Late Mrs Selvathi Sampanthan

## திதி வெண்பா

ஆண்டு விகிர்தி அமைந்த வைகாசி
பூண்ட பூரணைத் திதியதனில் - மாண்பு
ஐதிசம்பந்தன் பத்தினியார் செல்வதி
வையத்தை விட்டகன்ற நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சபுராணம்

## விநாயகர் வணக்கம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாய் தன்மையினாற்
கண்ணிற் பணியின் கனிந்து

## தேவாரம்

இடரினுந் தளரினு மெனதுறு நோய்
தொடரினு முனகழல் தொழுதெழுவேன்
கடல்தனிலமுதொடு கலந்த நஞ்சை
மிடறினிலடக்கிய வேதியனே
இதுவோ வெமை யாளுமா
நீவ தொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள்ளாவடு துறையானே

## திருவாசகம்

தாயினும் நல்ல தலைவறென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்(டு) உள்ளம்
குளிரவென் கண்குளிர்ந் தனவே-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர்
குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாராயணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர்
குழாங்கள் திரையனைத்தும் நிறைந்து
பாரார் தொல் புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு
உண்டே லுன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ யாடும் போதுன்
அடியின்கீ ழிருக்க வென்றார்.

## திருப்புகழ்

இறவாமை பிறவாமல் எனையாழ்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற்கு மரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.
திருச்சிற்றம்பலம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி செல்வதி சம்பந்தன் வாழ்க்கைக் குறிப்பு

ஈழத்திருநாட்டின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்திற்கு மேற்கேயுள்ள சப்த தீவுகளில் ஒன்றாக விளங்கும், சைவமும் தமிழும் வளர்த்த காரைநகர் தங்கோடை என்னும் கிராமத்தில் சீரும் செல்வச் சிறப்பும் மிக்க ஐயம்பிள்ளை வேலுப்பிள்ளை, சின்னக்குட்டி தம்பதிக-ளின் நான்காவது புதல்வியாக 1938ம் ஆண்டு ஐப்பசி மாதம் 20 திகதி செல்வதி அவதரித்தார். அவருக்குத் தாய்-தந்தையர் செல்லம்மா எனப்பெயரிட்டனர். ஆனால் செல்லப் பிள்ளையாக தாய்-தந்தையர் நேசித்தமையால் அவர் காலக்கிரமத்தில் செல்வதியான-ார். இதுவே வழங்கிவரும் பெயராகவிருந்துவருகிறது.

இவருக்கு, காலம்சென்ற சுப்பிரமணியம் என்பார் மூத்த சகோதரரும் காலஞ்சென்ற, முத்தாட்சி, வள்ளியம்மை என இரு சகோதரிகளும் உடன்பிறப்புக்களாவர்.

இவர் தமது ஆரம்பக் கல்வியைம் தங்கோடை கோவிந்தர் பாடசாலை யிலும், இடைநிலை-உயர் கல்வியை யாழ்டன் கல்லூரியிலும், காரை நகர் இந்துக் கல்லூரியிலும் கற்றார். பினனர் தமது பட்டப்படிப்பை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் தொடர்ந்தார். இங்கு பொருளியல் பட்டதாரியாக (B.A.Hons) சிறப்புப் பட்டத்தினைப் பெற்றார்.

பின்னர் கொழும்புக்குச் சென்று அங்கு கணக்காளர் படிப்பையும் ஆங்கிலச் சுருக்கெழுத்தாளர் படிப்பையும் தொடர்ந்தார். நல்ல தொழிலைப் பெறவேண்டும் என்பதற்காக பல்துறைக் கல்வியையும் இவர் தொடர்ந்து மேற்கொண்டு வந்தார். படிக்கும்போதே திறமையும் ஆற்றலும் கடும் உழைப்பும் மிக்க மாணவி என்ற நற்பெயரைப் பெற்றிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1964ல் இலங்கைப் போக்குவரத்துச் சபையில் சுருக்கெழுத்தாளராகப் பணியினை ஏற்றார். தொடர்ந்து கணக்களராகப் பதவி உயர்வினைப் பெற்றார். 1977 இனக்கலவரத்தைத் தொடர்ந்து வடபிராந்திய போக்குவரத்துச்சபை அலுவலகத்திற்கு இடமாற்றம்பெற்று அங்கு சென்று பணியாற்றினார்.

1984ல் இலங்கை போக்குவரத்துச் சபையின் தூண்டுதல் திட்டத்தின்கீழ் போக்குவரத்துச் சபையிலிருந்து ஓய்வு பெற்றார். அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் "Promoters Engineering Company யில் சில வருடங்கள் நிருவாகப் பணிப்பாளராகப் பணியாற்றினார்.

தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்றிருந்த ஒக்ஸ்போட், கேம்பிரிஜ் தனியார் கல்வி நிலையங்களில் பொருளாதாரம், கணக்கியல் பாடங்களுக்கான விரிவுரையாளராகவும் பணியாற்றினார். பின்னர் சிலகாலம் கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியிலும் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

இலங்கையில் நிகழ்ந்த 1977 இனக் கலவரத்தைத் தொடர்ந்து அவரது கணவரால் ஆரம்பிக்கப்பட்ட சுடரொளி அச்சகத்தின் பிரதான பங்குதாரராகவும் இயக்குநராகவும் 1984லிருந்து இணைந்து கொண்டார்.

இந்த அச்சகத்திற்கு 1989ல் வட-கிழக்கை ஆக்கிரமித்திருந்த இந்திய அமைதிகாக்கும் படையினராலும் அதன் ஆதரவுடன் இயங்கிய தமிழ் ஆயுதக் குழவினராலும் (ஈ.பி.ஆர்.எல்.எப்.) அச்சுறுத்தலும் பாதிப்பும் ஏற்பட்டபோதிலும், அச்சகத்தை மிகத் துணிவுடன் அவர் தொடர்ந்து நடத்திவந்தார். இவர்களது தொடர் அச்சுறுத்தலால் அவரது கணவர் திரு. ஐ.தி.சம்பந்தன் 1990இல் நாட்டைவிட்டு வெளியேறி பிரித்தானியாவுக்குப் புலம்பெயர்ந்து வந்தபின்னரும் வாழ்க்கையை ஓட்டுவதற்கான பொருளாதாரத் தேவைகளுக்காக சுடரொளி அச்சகத்தைத் தொடர்ந்தும் நடத்தி வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1991இல் இலங்கை இராணுவம் யாழ்ப்பாணத்தில் ஆதிக்கம்கொண்ட வேளையில் அச்சகம் செல்தாக்குதலால் பாதிகப்பட்டது. இந்த நெருக்கடியால் 1992ல் அச்சகத்தை மூடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்த இக்கட்டான நிலையில், தமது இரு பிள்ளைகளையும் யாழ்ப்பாணத்தில் வைத்துப் பாதுகாத்து படிக்க வைப்பதில் பெரும் சிரமத்தை செல்வதி அம்மையார் எதிர்கொண்டார்.

1995ல் சிங்கள இராணுவம் மீண்டும் யாழப்பாணத்தை ஆக்கிரமித்தபோது மக்களோடு மக்களாக யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி நீண்டதூரம் சாவகச்சேரிவரை நடந்து கிளாலிக் கடலேரியைத் தாண்டி வவுனியாவுக்கு வந்தபோது இராணுவத்தால் இரண்டு மாதங்கள் தடுத்து வைக்கபட்டு விசாரணை என்ற பெயரில் பெரும் வேதனையை அனுபவித்து வந்தார். பின்னர் விடுதலையாகி, கொழும்பு வந்து தங்கிருந்த காலத்தில் 1998ல் stroke தாக்குதலால் பதிக்கப்பட்டிருந்தார். அவ்வாண்டு கணவரின் முயற்சியால் இலண்டன் வந்து அங்கு தனது புகலிடத்து வாழ்க்கையை வாழத்தொடங்கினார். திறமையும், அசாத்திய துணிச்சலும், நெஞ்சுறுதியும் கொண்டிருந்த அவா் இலங்கையின் பாதகமான அரசியல் சூழ்நிலையால் நோயுற்றார்.

இலண்டனில் அவர் வந்துசேர்ந்ததும், சிறந்த மருத்துவ சிகிச்சைகளைப் பெற்று, கணவரின் அன்புகலந்த பராமரிப்பின் பெறுபேறாக 2010 வரையும் கணவருடனும் பிள்ளைகள் இருவருடனும் இனிதே வாழ்ந்து வந்த இவர் தான் கண்களெனப்போற்றிப் பேணிவளர்த்த பிள்ளைகளின் மணக்கோலங்களையும் கண்டு, அவர்களின் திருமணத்தின் வழியா-கப் பெற்றெடுத்த தனது பேரப்பிள்ளைகளையும் தழுவிக் குலாவி, ஆறதலான வாழ்வை வாழ்ந்திருந்தார்.

2010 மே மாதம் 26ம் திகதி இரவு 12 மணிவரையும் கணவருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைத்து உரையாடிவிட்டு 'அப்பா நீங்கள் நீண்டநேரம் நித்திரை முழிக்காதீர்கள். போய்த் தூங்குங்கள்' என்று தனது கணவருக்கு விடைகொடுத்து விட்டு நித்திரைக்குச் சென்றார். வழமை போல் அவரது கணவர் காலை ஆறுமணிக்கு தேநீர் -கொடுப்பதற்குச் சென்றபோது ஆழந்த நித்திரையில் உள்ளார் என்று தட்டி எழுப்பியபோதுதான் அவரை ஆண்டவன் ஆட்கொண்டுவிட்டார் என்பதை அறிந்து அதிச்சியடைந்தார்.

திருமதி செல்வதி சம்பந்தன் அவர்கள் இவ்வுலக வாழ்வை நிறைவு செய்து 2010 ஆண்டு மே மாதம் 27ம் திகதியன்று விய-ாழக்கிழமை இறைவனடி எய்தினார்.

## திருமண வாழ்க்கை

படித்துப் பட்டம் பெற்று தொழிற்றுறையில் ஈடுபட்டபின்னர் அவரது திருமணம் 1970 நவம்பர் மாதத்தில் நடைபெற்றது. அவரது மூத்த சகோதரி முத்தாட்சியின் கணவர் திரு.பொன்னம்பலம், பதுளையில் பிரபல வர்த்தகராகவிருந்தவர். அவரின் முயற்சியினால் பாலோவோடை அம்மன் தேர்த்திருவிழாவின்போது செல்வதி அவர்களின் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. அதனால் போலும் இவ்வாண்டு பாலாவோடை அம்மன் தேர்த்திருவிழா நடைபெற்றபோது அன்னார் சிவபதம் எய்தியதும் அற்புதமே.

காரைநகர் களபூமியில் இராமுடையார் பரம்பரை ஒரு விருட்சம்போல் வளர்ந்த ஒரு வம்சாவழியினர். சமுதாய வளர்ச்சியில் வம்சாவழியினர் என்போர் ஒரு இரத்த உருத்து தொடர்புடையவர்கள். வம்சாவழியினரிடையே ஒரு பிள்ளை பிறந்தால் அல்லது அந்த வம்சாவழியினர் எவராகுதல் இறந்தால் ஒரு மாதம் வரை துடக்குக் காத்து உரித்தை நிலை நாட்டுகின்ற பாராம்பரியம் இன்றும் இருந்துவருகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமுடையார் பரம்பரை ஏழு தலைமுறைக்கு மேல் நீண்ட கொடிபோல் வளர்ந்து வரும் பரம்பரை. காரைநகரில் இதற்கு ஒரு வரலாறு உண்டு.
அந்த வம்சாவழித் தோன்றல் தம்பர் காசிப்பள்ளை ஐயாத்துரை திருஞானசம்பந்தன் அவர்களை செல்லம்மா என்னும் செல்வதி திருமணம்செய்து சிறப்பான வாழ்க்கை நடத்திவந்தார்.

இலங்கைத் துறைமுக அதிகார சபையில் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றி வந்த திரு. ஐ.தி.சம்பந்தன் ஒரு தொழிற்சங்கவாதியும், அரசியல் ஈடுபாடுகொண்ட சமூகப்பணியாளருமாவார். இத்தகைய கொள்கையுடன் வாழ்பவரைத் தனது வாழக்கைத் துணைவனாகத் திருமணம்செய்து சிறப்புடன் வாழக்கை நடத்திவந்த துணிச்சல் மிக்கவர்.

தனது வாழக்கையில் பிள்ளைச் செல்வத்தையும் நிறைவாகக் கண்டார்.1972ல் முதல் புதல்வன் ஞானவடிவேல் என்பவரைப் பெற்றெடுத்தார். 1974ல் செல்வன் ஞானானாந்தனையும், 1977ல் ஞானலிங்கத்தையும் பெற்றெடுத்த பெருமைக்குரிய தாயாவார்.

கணவன் அரசியலிலும் பொதுப்பணிகளிலும் ஈடபட, தமது பிள்ளைகளைப் படிப்பிப்பதில் மிக அக்கறையுடன் செயற்பட்டார். மூத்த புதல்வனான ஞானவடிவேலை M.Sc படிக்கவைத்து, இலண்டனில் ஒரு நிதி ஆலோசகராப் பணியாற்றக் கண்டவர் செல்வதி. ஞானவடிவேலுக்கு, யாழ்ப்பாணத்தில் உதவி உணவுக் கட்டுப்பட்டு அதிகாரியாகப் பணியாற்றிய காலஞ்சென்ற நடேசபிள்ளை-கலாரராணி தம்பதிகளின் மூத்த புதல்வி ஆர்த்தியை (கணக்காளர்) திருமணம் செய்துவைத்து தருண் என்ற பேரப்பிள்ளையைக் கண்டு மகிழ்வுற்றிருந்தார்.

இரண்டாவது மகன் ஞானானாந்தனை கணணித்துறையில் IT சிறப்புத் தேர்ச்சி பெற வைத்து, ஜோர்டானில் ஒரு தனியார் புடவை ஆலையில் IT முகாமையாளராகப் பணியாற்றக் கண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ந்தவர். அவருக்கு நல்லூரைச் சேர்ந்த திரு கனநாயகம் வசந்தா தம்பதிகளின் புதல்வி பகீரதியைத் திருமணம் செய்து அவர்கள் பெற்றேடுத்த யசிதா, ஷாஸ்கிகா ஆகிய இரு பேரப்பிள்ளைகளுடன் பாசமாக் பழகிவந்தவர்.

மூன்றாவது மகன் ஞானலிங்கத்தை MBA படிக்க வைத்து இலண்டனுக்கு அழைத்து தன்னுடன் வந்து வாழவைத்ததோடு, தாவ-டியைச் சேர்ந்த இலங்கை மத்திய வங்கி அதிகாரி திரு. பாலசுப்பிரமணியம் சாந்தாதேவி தம்பதிகளின் பதல்வி மலர்விழி அவர்களை திருமணம்செய்து வைத்து மகிழ்ந்தார். அவர்கள் பெற்றெடுத்த சயனிகா என்ற பேரப்பிள்ளையுடன் அன்பாக வாழ்ந்துவந்தவர்.

குடும்பச் சுமையோடு பொதுப்பணிக்கும் போதிய ஆதரவு நல்கி அவரது கணவன் திரு. ஐ.தி.சம்பந்தனுக்குப் பக்கபலமாக இருந்து உதவி வந்தவர். பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபாவின் பக்தராகவும், முருகபக்தராகவும் வாழ்ந்து வந்தவர்.
26-05-2010 அன்று இரவு 12.00 மணிவரை தனது கணவுனுடன் உரையாடிவிட்டு உறங்கச்சென்றவர். அதிகாலை 6.00 மணிக்கு வழமைபோல் கணவர் காலைத் தேனீர் வழங்கச் சென்றபோது நீண்டதுயில் கொள்வதைப் பார்த்து அதிசயித்துவிட்டார். பின்னர்தான் அவர் கொண்டது மீளாத்துயில் என்பதைப் புரிந்துகொண்டார்.
திருமதி செல்வதி சம்பந்தன் தமது 72வது வயதில் இறைவன் நிழழடிசேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IN MEMORY OF THE LATE MRS. SELLAMMAH SAMPANTHAN

Mrs. Sellammah Sampanthan affectionately and with fondness called and known as Selvathy was born on 20th October 1938 in Thangodai of Karainagar. Her parents the late Mr. Ilampillai Velluppillai and Mrs. Sinnakuddi. She was the youngest with 2 other sisters and one brother.

She had her early education at Govindtherer Vidyalayam, primary education at Yarltan College up to S.S.C ,later GCE A/L at Karai Hindu College and higher education at Jaffna College (Vaddukoddai) and graduated from there with B.A. (Hons) in Economics. She in deed had a brilliant academic record. She then proceeded to get professional qualification in Accountancy which helped her to secure an excellent employment.

In 1964 she was appointed as an Accountant by the Ceylon Transport Board in their head office in Narahenpitiya. She worked very hard with absolute dedication and commitment. Consequently she won the admiration and respect of her colleagues both superiors and subordinates.

Time came, like anyone else, for her to settle down in life. It is said that marriages are made in heaven. True to this saying, she married Mr. I.T. Sampanthan, in November 1970. Marriage blossomed with three lovely childrens namely,

1 Gnanavadivel married to Aarthi

2 Gnananthan married to Baheerathi

3 Gnanalingam married to Malarvili

They are all well educated with good employment in their chosen field. In deed, much of the credit go to their parents and



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

in particular to the determined and dedicated mother who played a dominant part in shaping their lives in a way being able to stand on their own feet.

Her husband is a well known trade union activist, political activist, writer, author of many publications, and editor of Chuderoli . It is a well known saying that behind the success of every man there will be a woman. It is absolutely true of Mr. I. T. Sampanthan s wife. He was able to make a valuable contribution to the Tamil Community and even to the wider community both in Sri Lanka and lately in the U.K. because of the support and encouragement he received from his beloved wife.

Let me now go back to Mrs. Sellammah Sampanthan's early life. As I said earlier since her appointment as an Accountant in 1964 with the CTB, she continued to work in various places in Sri Lanka and after long loyal and committed service, she retired in 1984 having worked for 20 years. However, being active and healthy women, then and because of her extensive knowledge and experience in Accountancy and her passion to teach and impart to others; she ventured out to become a lecturer. She became part-time lecturer in Accountancy at Oxford and Cambridge Tutories in Jaffna. She was also a visiting lecturer at the same time, at Kokuvil Technical College.

She had been a devoted loyal and a truly supportive wife. She was not only a life partner in his life but also a business partner in the publication of Chuderoli . At one point, she undertook the full management and running of this Tamil Journal. She was a lady with full determination and will power. In 1991, due to military actions and through the intervention of the Sri Lankan authorities, the press section had to close down and hence the publication too had to come to an


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

end. Her husband was forced to leave Sri Lanka and came to London. From this time, she assumed full responsibility to bring up their 3 children, under the most difficult and trying times. In 1995, with the rest of the civilian population, she and her children had to move out of Jaffna and seek refuge in Vanni. She had to endure enormous hardships with mental agony. She was detained by the Sri Lankan Army for a short period of time.

She was able to move from there with her children to Colombo in 1996. All these sad events and bitter experiences had a heavy toll on her health. She became a casualty of circumstances and had a stroke in that year. She was never the same since then. She therefore, decided to join her husband in U.K. in 1998. I had heard of Mr. I.T. Sampanthan, whilst both of us lived in Sri Lanka. However, I came to know him after he arrived in the U.K. where I had been living with my wife for many years.

I had close associations with Mr. Sampanthan through my involvement in social, political, cultural and community activities. Since late 1990s, we had even closer contacts because of the activities of the World Peace Organization of which Mr. Sampanthan was the architect. I had the privilege of being its founder chairman whilst he functioned as its Secretary from its inception to date. His wife always accompanied him despite her ill health, for all the functions and events of the World Peace Organization. I am personally aware of the contribution and support given by her to her husband not only in respect of the activities of this organization but also with regard to many others.

She was truly a devoted wife equally her husband particularly at a time when she became affected by stroke and its after



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

effects, looked after her at all times not just as a duty but with full dedication, devotion and love more like a father and daughter relationship.

We are certain that she as a person with such good qualities in particular love, affection and caring would have received modsham-merged with God in heaven. Let me conclude by saying that

> *She who is hidden, who has entered into the cave of the hearts of hearts, cannot be seen with external eyes. She is seen with the eyes of the soul. Without beginning without end, she is not destroyed when the body is destroyed. She will live with us for ever and ever .*

My wife joins me in extending our deepest sympathies and convey our heart felt condolences to her ever loving husband, sons, daughter-in-laws, grand children and all other relatives and friends who are dear to her. She will be sadly missed but fondly remembered by all of us.

Om Shanthi, Om Shanthi, Om Shanthi.

C.Sithamparapillai
Family Friend
80 Herent Drive
ClayHall, Ilford, ESSEX
IG5 0HG, UK
Tel:020 8550 0441

C. Sithamparapillai LLB.LL.M. (LON)
Diploma in Air and Space Law
(Ins of World Affairs)
Attorney-at-Law (Sri-Lanka)
Solicitor (England and Wales)
Solicitor (New South Wales, Australia)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயிற் சிறந்த கோயில் இல்லை

எமது தாயார் சிவன்பாதங்களை அடைந்து தெய்வமாகிவிட்டார். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக கந்தர்மடம், அத்திசூடி வீதி, ரெயில் ரோட்டுப் பிள்ளையாரை வணங்கி வந்தவரை விநாயகர் தன்னிடம் அழைத்துக்கொண்டார்.

அம்மா அவர்கள் தமது உடல் பொருள் ஆவி அனைத்தையும் எமக்காக முற்றும் முழுதுமாக அர்ப்பணித்தவர். எமது கல்விக்காக அவர் பட்ட கஷ்டங்கள் எமக்குத் தான் தெரியும். 99 சராசரி புள்ளி வாங்கினால் மற்ற 1 புள்ளி ஏன் வாங்கவில்லை எனக் கண்டிப்பார். கல்வி அறிவு தான் எமது செல்வம் என்று அதனை எமக்கு முறையாகப் பயிற்றுவித்தவர். நாம் அம்மாவின் ஆசையை நிறைவேற்றினோம். அதனால் நாம் இன்று நல்ல நிலையில் உள்ளோம் .

அப்பா தனது அரசியல் நடவடிக்கை காரணமாக பல சிக்கல்களை எதிர்நோக்கிய காலகட்டங்களில் எம்மை ஒரு குருவிக்கூட்டில் வைத்துக் காப்பது போல் பாதுகாத்து வந்தார். அவர் எதற்கும் பயப்படவில்லை. அவர் வெட்கமோ பயமோ பட மாட்டார். எதையும் மனத் துணிவுடன் நேருக்கு நேர் கேட்டு விடுவார். இது எல்லோருக்கும் தெரியும்.

அம்மாவுடைய குரல் எங்கிருந்தாலும் தனியாக ஒலிக்கும். அதில் ஒரு கம்பீரம், ஒரு தொனி இருக்கும். தனது பேரன் குறும்பு செய்தாலும் அதே தொனியில் அன்பை சற்று அதிகமாகக் கலந்து கண்டிப்பார்.

எந்த ஒரு வேலையை அம்மாவிடம் ஒப்படைத்தாலும் அதனை தான் தலைமை எடுத்து முற்றும் முழுதாகச் செய்வார். அது ஒரு திருமணமாக இருந்தாலும் சரி, சொந்த வீட்டு வேலையாக இருந்தாலும் சரி, அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட ஒரு வேலையாக இருந்தாலும் சரி அதனை முடிக்கும் வரை யாரை வேண்டுமானாலும் போய்ப்பார்க்கத் தயங்க மாட்டார். 1990ம் ஆண்டு அப்பாவைத் தேடி வந்த இராணுவம் எம்மில் ஒருவரைப் பிடித்து வைத்த போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது இருந்த யாழ் இராணுவ அதியாரியையும் தன்னிச்சையா-கச் சந்தித்து அவரை வெளியே கொண்டு வந்தார்.

ஈழப்போராட்டத்தினால் எமது குடும்பத்தில் 5பேர் 4 இடங்களில் பிரிந்து இருந்தோம். அக்கால கட்டத்தில் அவர் எமக்கு கடிதம் எழுதுவார். அவருடைய கடிதங்கள் தெளிவாகவும் மிக அழகான கையெழுத்திலும் எழுதப்பட்டிருக்கும். அதில் எழுதும் போது அம்மா அவர்கள் கடவுளைத் தினமும் வழிபடவேண்டும் என மறக்காமல் எழுதி முடிப்பார். அம்மாவுடைய கடிதத்தில் ஒரு தன்னம்பிக்கை இருக்கும். நமது வாழ்வில் நாம் அவரைப் போல் இன்னொரு பெண்மணியைப் பார்த்ததில்லை. அவருடன் பழகியவருக்கு அவரைப்பற்றி நன்கு தெரியும்.

கடந்த சில வருடங்களாக ஈழத்தில் எமது மக்கள் கஸ்டப்படுவதைத் தொலைக்காட்சியில் பார்த்து 'பாவம் ஏழைகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்' என மன வேதனை அடைவார். போராட்ட காலங்களில் ஏற்பட்ட கஷ்டங்கள் அவர் மனதில் இருந்து அவரது மனதை உறுத்திக்கொண்டிருந்ததை நாம் அறிவோம்.

நோய் வாய்ப்பட்டு இருந்த காலத்தில்கூட மற்றவர்களுக்கு எதுவித கஷ்டமும், துன்பமும் கொடுக்கக்கூடாது என்பதில் அக்கறையாக இருந்தார்.

தனக்கு அது வேணும் இது வேணும் என்று எதையும் கேட்டதில்லை. அவரிடம் இருந்து நாம் கற்ற வாழ்க்கைப் பாடங்கள் பற்பல. எமது தாயார் எமக்கெல்லாம் தெய்வமாகி விட்டார். அவர் எப்போதும் எம்மை மேலிருந்து பாதுகாத்துக் கொண்டே இருப்பார். அவருடைய வழியில் எமது பிள்ளைகளை நாம் வளர்ப்போம். அது தான் நாம் அம்மாவுக்குச் செய்யும் பிரதி உபகாரமாகும். தாயிற் சிறந்த கோயிலும் இல்லை என்பதே எமது மனங்களில் நிலை கொண்டுள்ளது.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.
பாசம் மிகு புத்திரர்கள்
**ஞானவடிவேல், ஞானானந்தன், ஞானலிங்கம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் மாமி

மாமியார் மருமகள் என்ற பிரிக்க முடியாத, தவிர்க்க முடியாத உறவுக்கு, மனிதனின் வயது, மனிதன் எப்பொழுது கூட்டம் கூட்டமாக குடும்ப வாழ்க்கைக்கு திரும்பினானோ அன்று ஆரம்பித்தது, இந்த உறவு. மாமியார் மருமகள் உறவைப் பற்றி நாம் கதைகளிலும் சினிமாக்களிலும் படித்ததற்கும் பார்த்ததற்கும் எமது நேரடியான மாமியார் மருமகள்மார் உறவிற்குமிடையே நிறைய வேறுபாடுகள். மாமியாரைப் பற்றிப் பயப்படாத மருமகள் உலகில் இருக்க முடியாது, அதுவும் மகளே இல்லாத மாமியார் பற்றி சொல்லவே தேவையில்லை. ஆனால் எங்கள் மாமியார் எங்கள் அம்மாவைவிட ஒரு படி மேலாக நடந்து கொண்டார். சரி எது பிழை எது என்பதனை மிக வெளிப்படையாகச் சொல்வார் எனினும் ஒரு போதும் கோபித்துக் கொள்ளாமை அவரின் சுபாவமாக இருந்தது.

எங்கள் மாமியிடம் பல்வேறு பரிமாணங்கள் காணப்பட்டமையை நாமறிவோம். சிறந்த தாயாக அவர் இருந்திருக்கின்றார். மூன்று குழந்தைகளை அதுவும் ஆண் குழந்தைகளை பாராட்டிச் சீராட்டி உயர்ந்த கல்வியளித்து சான்றோராக்குவது சுலபமான காரியமா? என்ன? சிறந்த குடும்பத் தலைவியாக அவர் வாழ்ந்தார். மாமாவின் வெற்றிக்குப் பின்னால் அவர் இருந்திருக்கிறார். ஒவ்வொரு ஆண்களின் வெற்றிக்கும் பின்னாலும் ஒரு பெண் இருக்கிறார் என்பது தானே உண்மை. அவரின் தார்மீக ஆதரவும் அன்பும் மாமாவிற்கு என்றும் பக்கபலமாக இருந்திருக்கிறது என்பதனை நாமறிவோம்.

இவற்றைவிட எங்கள் மாமி மிகச் சிறந்த நிருவாக அதிகாரியாக இலங்கை போக்கவரத்துச் சபையில் பணியாற்றியதை பலர் அறியாமல் இருக்கலாம். மிகச் சிறந்த நிருவாகத்திற்கும் கண்டிப்பிற்கும் பேர் போனவர் அவர். தமது திறமையால் முன்னுக்கு வந்தவர் என்று மற்றவர் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறோம், அந்தக் காலத்திலேயே கணக்கீட்டு முகாமையாளர் பட்டய நிறுவனத்தில் பட்டம் பெற்றவர் அவர்.

மாமியார் எங்களை மருமள்மாராக ஒரு போதும் நடத்தியதில்லை. ஒரு சிறிய விடயத்திற்கும் மனம் திறந்து பாராட்டுவதில் கஞ்சத்தனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டியதில்லை. எல்லோரையும் சமமாக நடத்தியவர். அதற்கேற்ப நடந்தவர்.

பேரக் குழந்தைகள் என்றால் மாமிக்கு அலாதுபிரியம். அவர்களோடு விளையாடும் போது அவவும் ஒரு குழந்தையாகி விடுவதுண்டு. அவவுக்கு நிறைய ஓய்வு நேரம் இருந்தமையால் பேரப் பிள்ளைகளோடு நிறைய நேரம் செலவிடுவா. அவர் அவர்களைப் பெயர் சொல்லி அழைப்பதும் ஒரு அழகு தான்.

எமது மாமியாரின் இழப்பு மிகப் பெரும் வெறுமையை எம்மிடையே ஏற்படுத்தியிருப்பதனை நாம் உணர்கிறோம். அவர் இருந்த இடம், உறங்கிய கட்டில் பாவித்த பொருட்கள் என எதைக் காணும் போதும் மனதில் பெரும் சுமை ஏற்படுகின்றது. உண்மையில் அவ நிறைந்த வாழ்வை வாழ்ந்து முடித்திருக்கிறா. எல்லாப் பிள்ளைகளுக்கும் திருமணம் அதன் பேறான குழந்தைச் செலவங்கள் என வாழ்வின் பூரண நிலைமையினை அவர் தொட்டிருக்கின்றார்.

ஒரு குடும்பத்தில் மூத்தவர்களின் அருமை அவர்கள் இருந்த நேரத்தைவிட இல்லாத போதுதான கூடுதலாக உணரப்படுகிறது' என்பது எங்கள் மாமியைப் பொறுத்தவரை நூறுவீதம் உண்மையானது. சாத்தியமானது

அவரின் ஆன்மா சாந்தியடையவும் தோன்றாத் துணையாக இருந்து எம்மை வழிநடத்தவும் எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டிக் கொள்கிறோம்.

மருமக்கள் -

**ஆர்த்தி**
**பகீரதி**
**மலர்விழி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அப்பம்மா



விரல் பிடித்து நடை பழக்கி,
நிலாக்காட்டி சோறூட்டி,
நீதிக்கதை பல சொல்லி என்னைத்தூங்க வைப்பா
என நான் நினைத்த என் அப்பம்மாவைக்காணேன்.
'பிறாமில்' இருந்த வண்ணம் எட்டிப் பார்க்கிறேன்,
என் முன்னேயிருந்து 'தீபத்தில்' சீரியல் பார்க்கும்
அப்பம்மாவை என்றும் பார்த்துக் கொண்டே இருக்கலாம்.
என்னையும் கதை கேட்பா, நாடகமும் பார்ப்பா
நாடக விமர்சனங்கள் அந்த மாதிரி இருக்கும்.
விருந்தினர்களுடனான அப்பாம்மாவின் கதை மிக சுவார்'யமானது.
யாரையும் நோகடிக்கும் வார்த்தைகள் அவரிடமில்லை.
எல்லோரின் நடத்தைக்கும் காரணங்கள் வைத்திருப்பா,
'பாவங்கள் தானே' என்பது அவர் காட்டும் நியாயம்.
'ஷயனிக்கா, ஷயனிக்கா' என அவர் வாய் நிறைய
கூப்பிடுவதே ஒரு தனி அழகு தான் !
நிமிர்ந்து பார்த்தால் இன்னொரு குழந்தையாகி
மனம் நிறைய சிரிப்பா.
அவரவர் தம் வேலை பார்க்க அப்பம்மா என்னுடன் இருப்பா,
அவ நீட்டி நிமிர்ந்து படுத்திருந்தா
'அப்புசுவாமி' யிடம் அவ போய்விட்டதாக
எல்லோரும் சொல்கிறார்கள்
அப்படித்தான் இருக்கும், அவவுக்கு பக்தி அதிகம்.
என்றாலும், எனக்கு அழுகையாக இருக்கிறது
'ஷயனிக்குட்டி ஷயனிக்குட்டி' என்றழைக்க இனி யாரைத் தேடுவது
நானிருந்தால் நடக்காது என்று நானில்லா நேரத்தில்
அப்பம்மா போய்விட்டா.ஆனாலும் ஒன்று நானறிவேன்,
முற்றிப்பழுத்த பழம் நீங்கள் என்பதனால் நிச்சயமாய் விதையாவீர்
அக்காலத்திற்காய் நான் நிச்சயமாய் காத்திருப்பேன்
போய் வாருங்கள் அப்பம்மா போய் வாருங்கள்
பேத்தி
**ஷயனிக்கா ஞானலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு அப்பம்மா

அப்பம்மா அப்பம்மா!

எங்கள் அன்பு அப்பம்மா!
ஆசை ஆசையாய்
உங்களைக் காண
நினைத்து நாட்கள்
பல கழிந்தன.

தொலைபேசியில் மட்டுமே
உங்கள் அன்பு வார்த்தை
கேட்டு மகிழ்ந்தோம் நாங்கள்.

விழி மூடி உறங்கிய நீங்கள்
விடிந்ததும் விழிக்கவில்லையாம்.

அப்பப்பா சொன்னார்.

விழி கலங்கி அழுதோம்.

நாங்கள் அம்மாவுடன் சேர்ந்து
அப்பாவுக்கும் ஆறுதல்
சொன்னோம்.

நீங்கள் சொல்லித் தந்த
தேவாரமும் நாங்கள்
மறக்கவில்லை.

பொன்குஞ்சு பொன்குஞ்சு
என்று சொல்வீர்கள் எங்களை.

இனியார் அப்படி அழைப்பது?

விரைவில் பார்ப்போம் என்று
இருந்தோமே! விரைந்து
சென்று விட்டீர்களே!

ஒவ்வொரு பிறந்த நாளுக்கும்
இனி யார் வாழ்த்து மடல்
அனுப்புவது?

உங்களுக்கு இரங்கல்
சொல்ல வைத்து விட்டீர்கள்!
நாங்கள் நல்லாக வாழ்வதைப்
பார்க்க ஆசைப்பட்டீர்கள்.

இப்போது வாழ்த்தி விட்டுச்
சென்றீர்கள்.

உங்கள் நினைவுகள்
எம்முடன் உண்டு.

உங்கள் ஆத்மா
சாந்தியடைய எங்கள்
பிரராத்தனைகள் என்றும்
உண்டு

அன்புடன்
**யஷ்மிதா ஹர்ஷிகா தருண்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புப் பெரியம்மாவுக்கு எமது அஞ்சலி

எங்கள் அருமைப் பெரியம்மா உங்கள் திடீர் மறைவு கேள்வியுற்றவுடன் நாங்கள் மிகவும் அதிர்ச்சியுற்றோம். மிகுந்த கவலையும் வேதனையும் அடைந்தோம். நீங்கள் இன்று நம்முடன் இல்லையென்று சொன்னாலும் நம்பமுடியாமல் இருக்கிறது. உங்கள் மறைவு பெரியம்மா எங்களால் ஜீரணிக்க முடியாமல் இருக்கிறது. எங்களையும் எங்கள் குடும்பத்தையும் எவ்வளவு நேசித்தீர்கள். என்ன உதவி வேண்டுமானாலும் சிரமம் பாராமல் செய்தீர்கள். நாங்கள் சுவிஸ்சில் இருக்கும் போது நீங்கள் எங்கள் இல்லத்திற்கு வந்ததும் எங்களுடன் கொஞ்ச நாள் தங்கியிருந்த போது எவ்வளவு மனம் விட்டுப் பேசினீர்கள். உங்கள் அன்பும் பண்பும் எங்களுக்கு மாத்திரமன்றி எங்கள் உறவினருக்கும் நண்பர்களுக்கும் பிடித்தி ருந்தன. நீங்கள் இல்லாத வெற்றிடத்தை யார் தான் இனி நிரப்ப முடியும்? ஆகவே உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை மனம் கசிந்து வேண்டுகின்றேன்.

பெரியம்மா கூறிய அறிவுரைகளில் சில எனது நினைவில் அலை மோதுகின்றன

* நானே பெரியவன் நானே சிறியவன் என்ற அகந்தையை விடுங்கள். அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக்கொண்டிருப்பதை விடுங்கள் .
* குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள்.
* உங்கள் கருத்துக்களில் உடும்புப்பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்.
* கற்றவர் கருத்துக்களை, செயல்களை நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள்.
* மற்றவர்களுக்குரிய மரியாதை காட்டவும் இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

அன்பு பெறாமகள்

**சற்குணராஜா சுபாஜினி**

**சுவிஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Peri Amma

Life...This can be represented by an hourglass, starting as soon as it is turned around and finishing as soon as the last drop of sand has fallen.

However, it is not how long we spend this precious lifetime on earth but what we leave behind, as a result of it.

My Periamma has done just this...

Her uplifting laughter, vast knowledge and imperishable kindness will never vanish from my heart, as it, from the very first day I saw her become a trade mark through which I always identify her by.

I will always remember, as I enter the house numbered 15 on Rutland road, Periamma opening the door and saying "KUNCHUKAL ULAI VAANGO" and "RAVI MAMA AKKAL VANTHIDINUM" with immense joy. Nor will I forget Periamma advising my sister and I to study very well and gain a good education, but never in vain, for she wants all to succeed, not just her own family. I know for certain that you all will agree with me on this.

As Periamma is a thorough devotee of Lord Muruga, I will certainly ask him to bless Periamma so that she will always be at peace, as I know Periappa, who is standing here, will want her to be.

Lastly, I would like to conclude with a confession that my family and I are guilty that we could not provide you, Periamma, with the love and care that you showered us with.

God bless you Periamma, on behalf of 'Ravi Mama Aakkal'...

**Kajan Raveendranathan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்ததியினரின் சிந்தனைக்கு

நமது வாழ்க்கையில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மாற்றங்களைப்பற்றி நான் சிந்திப்பதுண்டு. நமக்கு முதல் மூத்தவர்களுடைய வாழ்க்கை முறைக்கும் இன்றைய சந்ததியினருக்கும் இடையில் பரம்பரை, பாரம்பரிய பதிவுகளுக்குப் புறம்பான ஒரு மாற்றம் ஏற்பட்டுவருகிறது. இது வாழ்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. மக்களும் இம்மாற்றங்களை அறிந்துள்ளனர் என நான் கூறவேண்டிய அவசியமே இல்லை.

நமக்கு முன்னோடிகளாக வாழ்ந்தவாகள் காலத்தில் அவர்கள் தமது பாரம்பரியத்திற்கு அமையக் கடைப்பிடித்த நடை, உடை, பாவனைகள், பழக்கங்கள் யாவும் இன்று புதிய மாற்றத்தைப் பெற்று என்னவோ? ஏதோ? என்று படர்ந்து வருவதையும் காண்கிறோம். கணவன் மனைவி உறவில்கூட மாற்றத்தைக் காண்கிறோம்.

இந்த வாழ்க்கை மாற்றத்தைச் சில சமயச் சிந்தனையாளர்கள் மாயை என்கிறார்கள். மரபாளர்கள் போலி என்கிறார்கள். கவிஞர்கள் ஆசை என்கிறார்கள். யார் எப்படிக் கூறினாலும் மாற்றத்தில் மாற்றம் இல்லை என்றே கூறலாம்.

மண்வாசனையுடன் கூடிய தமிழர் மரபு பேணும் பெண்கள் இன்றும் நமது மத்தியில் இருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரியது. இப்படித் தமிழ்க் கலாசாரத்தைப் பேணும் எத்தனை பெண்கள் நம் மத்தியில் இருக்கிறார்கள் என்பது சிந்தனைக்குரியது.

இப்படியான ஒருசூழ்நிலையின் மத்தியில்தான் எனது நண்பர் ஐ. தி. சம்பந்தன் அவர்களின் துணைவியார் அமரத்துவம் அடைந்த செல்வதி அம்மையார் பற்றிச் சில வாா்த்தைகளைப் பகிர்ந்துகொள்ள உள்ளேன்.

நண்பர் சம்பந்தனுடன் எனக்குள்ள தொடர்பு அரை நூற்றாண்டாக இருக்கும் என்று சொன்னால்கூடத் தவறில்லை. சமயம், எழுத்து, பதிப்புத் துறைகளில் அவருக்க இருந்த ஈடுபாடு இதற்குக் காரணமாகும். நானும் பத்திரிகைத் துறையுடன் வளர்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தமை எமது உறவுக்குப் பக்கபலமாக இருந்தது. இந்தத் தொடர்பு காலத்தால் வளர்ச்சி கண்டது. அவரது குடும்பம் பற்றி அறியும் வாய்ப்பையும் தந்தது.

இப்படி இலங்கை, இந்தியா பின்னர் பிரித்தானியா ஆகிய மூன்று நாடுகளிலும் தொடர்பு வளர்ந்தது வலுப்பெற்றது. இதனால் செல்வதி அம்மையாா அவர்களையும் அவரது அன்பான குணாதிசயங்களையும், பண்பான உபசாரங்களையும், அறிவாற்றலையும் அறியும் வாய்ப்பும் இதனால் ஏற்பட்டது.

சமயம், வழிபாடு, ஆலய தரிசனம், கல்வி, இசை, பண்பாடு, பாரம்பரியம், மண்பற்று, கணவன் மனைவி உறவு - இவை எதிலும் தளர்வறியாத பற்றுக் கொண்டவர் திருமதி செல்வதி சமபந்தன் அவர்கள் என்பதை அனுபவரீதியாக நான் அறிவேன்.இவற்றைவிடது துணிவு இவரது வாழ்க்கையின் வெற்றிக்குக் கிடைத்த ஆயுதமாகும்.

இதற்கு ஒரு உதாரணம் - யாழ்ப்பாணக் கல்லூரியில் (JAFFNA COLLEGE) இவர் கல்வி பயின்ற காலத்தில் இவர் ஒரு இளம் பெண். சில சமயங்களில் நடையில்தான் கல்லூரிக்குச் செல்வதுண்டு. அப்படிச் செல்லும்போது பஜனைப் பாடல்களைத் தெருவில் பாடியபடியே செல்வாராம். ஒரு இளம்பெண் இப்படித் தெருவில் பாடிக்கொண்டு போவதையிட்டுச் சிலர் விசனப்பட்டபோது "அவன்தாழ் வணங்கும்போது" ஆண்டவனுக்கே கேட்க வேண்டாமா? எனப் பதில் கொடுத்து மடக்கி விடுவாராம். சிறு வயதிலிருந்து ஆலயங்களுக்குச் சென்று தேவாரங்களைப் படிப்பதிலும் ஆர்வம் மிக்கவராக இருந்தமையும் இப்படிப் பாடிக்கொண்டு செல்லத் தூண்டுதலாக இருந்திருக்கும்.

இப்படித் தேவாரத்துடன் யாழ்ப்பாணக் கல்லூரிக்குச் சென்ற இவர் இங்குதான் பொருளாதாரப் பட்டதாரியானார்.

குடும்ப பாரத்தை ஒரு பெண் ஏற்கும்போது "வாழ்க்கைத் துணை" என்பார்கள் அதன் அர்த்தத்திற்கு உதாரணமான வாழ்க்கை செல்வதி அம்மையாரின் வாழ்க்கையாகும். நண்பர் சம்பந்தன் ஏற்ற பணிகளுக்கு எல்லாம் ஒரு தூணாகத் துணை நின்ற பெருமைக்கு உரியவர். சுடரொளிப் பதிப்பகமானாலும் சரி, தொழிற்சங்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டமானாலும் சரி, அரசியல் விடயமானாலும் சரி, ஆலயப் பணியாக இருந்தாலும் சரி நண்பர் சம்பந்தன் அவர்களுக்கு ஒரு வலுவான பங்காளியாக விளங்கியவர் இவா.

தமிழர்களது பாரம்பரியம் பேணுபவர்களில் திருமதி. சம்பந்தன் அவர்கள் பிரித்தானியாவில் முன்னணி வகித்தவர் எனலாம். எந்த வைபவமானாலும் - நீறணிந்த நெற்றி, குங்குமத் திலகம், பட்டுச் சேலை, பரிவான உபசாரம், அன்பான சிரிப்பு - இவைகள் யாவும் அம்மையாரின் இலட்சணங்கள்.

இன்றைய நவநாகரீக மோகத்தில் கால் பதிப்பவர்கள் கவனிக்க வேண்டிய பல வாழ்க்கை சுவடுகள் இவை.

தனிப்பட்ட முறையில் இவரது பிரிவு பல துறைகளில் தாக்கத்தை எனக்கு ஏற்படுத்தி உள்ளதென்பதை மறைப்பதற்கில்லை. எப்போது தொலைபேசியில் பேசினாலும் "ஐயா! சாப்பிட்டீங்களா? என்ன சாப்பிட்ட நீங்கள்? எங்க வீட்டிலை நல்ல சாப்பாடு. உங்களுக்குத் தர முடியாமலிருக்கு. எப்ப வாறியள். நல்லாய்ச் சாப்பிடுங்கோ. அவர் வந்ததும் உங்களுக்கு எடுக்கச் சொல்லுறன்" என்பதுதான் அவரது பரிவாக இருக்கும். அந்த ஆதரவுக் குரல் ஓய்ந்துவிட்டது. யார் தொலைபேசியில் தொடர்பு கொண்டாலும் செல்வதி அவர்கள் அக்கறையுடன்தான் பேசுவார். இது அன்னாரது விருந்தோம்பல் பண்பாகும்.

இப்படியான இழப்புக்களின்போது நாம் இறைவனிடம்தான் சரணடைகிறோம். நம் வாழ்க்கயில் இன்பமும், அமைதியும் ஏற்படவேண்டுமானால் நம்மை இயக்கிக் கொண்டிருக்கும் இறைவனிடம் பரிபூரணமான அன்பு செலுத்தவேண்டும் என்று உபதேசிக்கிறது எமது சமயம்.

அம்மையாரின் பிரிவால் துயருறும் அன்பு நண்பர் சம்பந்தன் அவர்களுக்கும், புதல்வர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் இறைவன்தான் துணைநின்று துயர் தீர்த்து வாழ்க்கையில் மகிழ்ச்சியை ஏற்படுத்த வேண்டுமெனப் பிரார்த்திப்போமாக.

**கலாநிதி. பொன் பாலசுந்தரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் செல்வதி சம்பந்தன்.

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டிவிடும்"

நிறைவான அறிவுடைய மெய்யுணர்வாளர்களின் பெருமையை, உலகிற்கு அவர் வாழ்ந்துவிட்டுச்சென்ற வாழ்க்கைநெறிகளே காட்டிவிடும். இது வள்ளுவன் வாய்மொழி.

இதையே கண்ணதாசனும் "வாழும்போது வாழ்ந்த வாழ்க்கை போகும்போது தெரிகின்றது" என்று எளிமையாகப் பாடிச்சென்றான். என்றும் என் தந்தை ஸ்தானத்தில் வைத்து நேசிக்கும் ஐ.தி.சம்பந்தன் ஐயா அவர்களது துணைவியார் அமரர் செல்லம்மா (செல்வதி) சம்பந்தன் அவர்கள் வாழ்ந்து சென்ற வாழ்வும் அப்படியானதே!

கடந்த பல தசாப்தங்களாக நிகழ்ந்த ஈழ விடுதலைப் போராட்ட காலத்தில் பல்வேறு பாதிப்புகளையும் துணிவுடன் எதிர்கொண்டவர் அவர். இராணுவ அழுத்தங்களுக்கும், தொழில்ரீதியான பொருளாதார இழப்புகளுக்கும் முகம்கொடுத்து வந்த இக்கட்டான வேளையிலும் தன் குடும்பத்தைச் சிதையவிடாது பொறுப்புடன் கட்டிவளர்த்து வழிநடத்திவந்த ஒரு திடசிந்தையுள்ள தாயையே அன்னாரின் உருவத்தில் நான் என்றும் காண்கிறேன்.

ஆலமரத்தின் விழுதுகள் போல ஆயிரம் உறவுகள்தான் சம்பந்தன் ஐயாவுக்கு இருந்தாலும், அந்த ஆலின் வேராக இருந்து குடும்ப விருட்சத்தை உறுதியுடன் பேணிக்காத்தவர் செல்வதி அம்மையார்.

உடல்தளர்ந்த இறுதிக்காலத்திலும்கூட அவரிடம் காலாகாலமாக இருந்து வந்த நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும், பிசிறில்லாத குரலும் அவரது நேரிய, சீரிய வாழ்வையே பிரதிபலித்துவந்தன என்றால் மிகையாகாது.

தொலைபேசியில் எனது குரலை வேறுபடுத்தி இனம்காண அவர் வைத்த பெயர் "லூட்டன் செல்வராஜா". அதுவே எனது செவிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னமும் ஒலித்துக்கொண்டிருக்கின்றது. நான் அங்கு செல்லும் வேளைகளில்- அது எந்நேரமானாலும் அவர் எதேச்சையாக விடுக்கும் கேள்வி "சாப்பிட்டீர்களா ராசா?" என்பது தான்.

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு"

ஆம் செல்வதி அம்மையார் இன்று "நல்விருந்து வானத்தவர்க்கு". அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும், அவரது பிரிவையிட்டு நிலைகுலைந்து நிற்கும் அவரது குடும்பத்தவர்களின் உள ஆறுதலைவேண்டியும் இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

ஓம். சாந்தி சாந்தி சாந்தி

**என்.செல்வராஜா**
லூட்டன். 27.06.2010





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்பு மரியாதை மனிதநேயம்

எமது ஊரைப்பற்றியும், திக்கரை முருகன் மகிமை பற்றியும் என்னுடன் மனம்விட்டுப்பேசும் ஒரு மதிப்பும் மரியாதையும் நிறைந்த அன்பான உறவினரை இழந்துவிட்டேன் என்று சொல்வதா அல்லது அன்புள்ளத்துடன் அதாவது பாசம் நிறைந்த மனித நேயத்துடன் எல்லோருடனும் பழகி ஆதரிக்கும் ஒரு நல்ல உள்ளத்தை இழந்துவிட்டோமா என்ற கேள்விகள் என் உள்ளத்தை உறுத்திக் கொண்டிருக்கின்றன. அனுதாபச் செய்திகளை அனுப்பும் உள்ளங்களில் உள்ள வேதனை என் உள்ளத்திலும் குடிகொண்டுள்ளதை என்னால் மறைக்க முடியவில்லை என்பதே உண்மை நிலையாகும்.

நான் தொலைபேசியில் அண்ணன் சம்பந்தனுடன் தொடர்பு கொள்வதுண்டு. அந்தத் தொலைபேசி அழைப்பை ஏற்பவர் அனேகமாகவும் அண்ணி செல்வதி அவர்களாகவே இருப்பார்கள். பேச்சை ஆரம்பிக்கும்போதே "திக்கரை முருகன் ஆலய திருநாவுக்கரசருடைய மகன் தானே!" என்பார். இதிலிருந்து அவர் பந்தப் பற்றிலும் பார்க்க கௌரவத்திற்கு முக்கியம் கொடுப்பதைப் புரிந்து கொள்ளலாம். இப்படி செல்வதி அவர்கள் தொலைபேசி யிலேயே தமது அன்பையும், பண்பையும் செலுத்தி மதிப்பளிப்பவர்.

திக்கரை முருகன் ஆலய புதிய காண்டாமணி பிரதிஷ்டை செய்யும் வேலைநிமித்தமாக நான் காரைநகர் வந்துவிட்டேன். அதனால் அவரது இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்ள முடியாமல் போய்விட்டது. இதனால் வேதனை அடைந்துள்ளேன். "நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்தது போல" நடந்துவிட்டதென்றே சொல்லவேண்டும்.

அண்ணன் சம்பந்தனுக்கும், அவரது மகன்மார்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் எனது மனவேதனையுடனான அனுதாபத்தைத் தெரிவிக்கிறேன். ஓம் சாந்தி

**சிவா தி. மகேசன்**
திக்கரை முருகன் திருப்பணிச் சபை (U.K)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K.Sinnathurai J.P
63, Lawerence Road
Eastham
London E6 1JN
Tel: 020 8472 4945
உபதலைவர்: தமிழர் விடுதலைக் கூட்டணி

க.சின்னத்துரை
தமிழரசி,
வன்னியசிங்கம் வீதி,
ஆவரங்கால், புத்தூர்
தொ.பேசி: 077 5126401
உப தலைவர்: இலங்கை தமிழரசுக்கட்சி

# துணிவு இவரது பலம்

இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை" என்பது ஔவையார் கூற்று.

"இல்ல தென் இல்லவள் மாண்பானால்" என்பது வள்ளுவர் கூற்று.

ஒருவரின் வெற்றிக்குக் காரணமாக வாழ்க்கைக்குப் பின் ஒரு பெண்மணி இருப்பார் எனக் கூறுவார்கள். திரு. ஐ. தி. சம்பந்தன் அவர்களின் எல்லை களற்ற சமுதாய சேவைகளுக்கு உறுதுணையாகவும் உந்துசக்தியாகவும் செயற்பட்ட திருமதி செல்வதி சம்பந்தன் அவர்களின் திடீர் மறைவு அவர்களின் குடும்பத்தாருக்கு மட்டுமல்ல எமக்கெல்லாம் தாங்கமுடியாத சோகத்தை, ஒரு வெற்று வெளியை உண்டாக்கிவிட்டது. அவரை நினைக்கும் போது அமைதியான தோற்றம், சாந்தமான முகம், எவருக்கும் துன்பம் இழைக்காத மனம், எல்லோருக்கும் உதவும் தாராள குணம் தோன்றுகின்றன.

அம்மையார் அவர்கள் கடந்த காலங்களில் சம்பந்தன் அவர்களின் இயல்பான சமூக சேவைகளில் - மொழிவளித் தொழிற்சங்கத்தின் பொதுச் செயலாளராகவும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பொதுச் சபை உறுப்பினராகவும், ஊடகத் துறையில் சுடரொளிப் பதிப்பகத்தை ஸ்தாபித்து நடத்தியவராகவும் செயற்பட்டுவந்த அவர்களுக்கு அவர் ஆற்றிய சேவைகளிலும் சரி, குடும்பபப் பொறுப்பை சீராக நடத்தியதிலும் சரி திருமதி சம்பந்தன் துணை நின்று பணிபுரிந்தவர் என்பதை நான் நன்கறிவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989 ஜீலை மாதம் 13ம் திகதி திரு. அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் அவர்கள் கொழும்பில் அகால மரணமடைந்து பின்னா யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டபோது அவரது பிரேத அடக்கம் சம்பந்தமான விபரங்களடங்கிய துண்டுப் பிரசுரங்களைப் பதிப்பித்துத் தருவதற்குச் சில அச்சகங்கள் பின்னின்ற சமயத்தில் திருமதி. சம்பந்தன் அவர்களை நானும், எஸ். ரி. ஆர் எனும் தியாகராசா அவர்களும், யாழ் உதவி மேயராக இருந்த என். ரி. செல்லத்துரை அவர்களும் சந்தித்து பிரசுரங்களைப் பதிப்பித்துத் தரும்படி கேட்டபோது அதை ஏற்று துணிவுடன் அவற்றை அச்சிட்டுத் தந்தமை அவரின் துணிவுக்கு ஒரு உதாரணமாகும்.

தமிழ் மக்களின் பொதுப் பணிகளில் திருமதி. சம்பந்தன் இப்படிப் பல துறைகளில் பணியாற்றி உள்ளார்.

அவரின் மறைவு குறிப்பாக திரு. சம்பந்தன் அவர்களுக்கும். அன்னாரது குடும்பத்தினருக்கும் பேரிழப்பாகும்.

திருமதி. செல்வதி அவர்கள் அவரது சமயப் பற்றுக்கமைய மே 27ம் திகதி வியாழக்கிழமை அதாவது வைகாசி விசாகம் பௌர்ணமி தினத்தன்று இறைபதம் அடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அன்றுதான் புத்தரும் ஞானம் பெற்ற தினமாகும். இப்படிப் புனிதமான ஒரு தினத்தில் வாழ்க்கைப் பூரணத்துவம் கிடைப்பது அரிதாகும். அன்னாரது சமயப் பற்று அவரது பிரிவிலும் தெரிகிறது.

**ஆவரங்கால் த. சின்னத்துரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்க்குத் தாயான சம்பந்தர்

தமிழ்ப் பற்றாளரும், அன்பாளர், பண்பாளர் என நண்பர்கள் மத்தியில் மதிக்கப்பட்டு வருபவருமான நண்பர் ஐ. தி. சம்பந்தன் அவர்களின் துணைவியாரின் பிரிவுச் செய்தி செய்தி கேட்டு மிகவும் வேதனைப்படுகிறேன்.

உலகக் கவிதைப் போட்டியை நடத்திய இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகம் சென்னையில் பரிசளிப்பு விழாவை நடத்திய சமயத்தில் அதன் தலைவர் கலாநிதி பொன் பாலசுந்தரம் அவர்களும், திரு. சம்பந்தன் அவர்களும் சென்னை வந்திருந்தார்கள்.

அப்போதுதான் எனக்கும் அவருக்கும் இடையில் நேர்முகத் தொடர்பு ஏற்பட்டது. இப்படியான விழாக்களை நடத்த கணவனின் பின்னணியில் "ஒரு பெண்" இருக்கவேண்டுமென நான் நினைத்ததுண்டு. அந்த உண்மையைக் காலப்போக்கில் அறிந்துகொண்டேன். "சுடரொளி" சஞ்சிகையின் நிர்வாகி திருமதி செல்வதி சம்பந்தன் என்பதைப் பார்க்கும் போது இது புலனாகிறது.

அம்மையார் உடல் நலக் குறைவாக இருந்த சமயத்தில் தாய்க்குத் தாயாக அவரைக் கவனித்து வந்த ஒரு பெருமனம் கொண்டவர் சம்பந்தன் ஐயா அவர்கள்.

செல்வதி அம்மையார் அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.

**கவிஞர் இரா இரவி மதுரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IN LOVING MEMORY OF
# MRS. SELVATHY SAMPANTHAN

A couple of days back there was a call from my friend I. T. Sampanthan and when I heard his voice I cracked a joke. Instead of his usual laughter there was silence for a second and in a trembling voice he said he had bad news for me and that his dear wife had passed away the previous day.

I was speechless and I cannot recollect what I have said to console a loving husband. Anyway I could remember saying in Tamil "Seemati poovum poddudanum ulagai vidduch chentruvidda"! Then I comforted Sampanthan stating that he should consider himself fortunate as he had his wife by his side for over forty years who gave him three sons, all happily married with five grand children.

God has given all of us a return ticket whom we came to this world but the return (departure) has not been denoted in the ticket. Selvathy has gone and all the rest of us are in the queue not knowing the date and time of departure!

Late Mrs. Sampanthan a graduate of the famous Jaffna College had been working in several government departments in Sri Lanka. Exactly like her husband she was uncompromising in meeting an unjust situation and would fight back. The first time I met her was in the seventies when she came along with the husband to my Colombo residence when confronted with an urgent decision by her employer the C. T. B (Ceylon Transport Board). She redily accepted my advice fought back and



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

won the case in her favour. The wife was not second to the husband in matters like this.

Mrs. Sampanthan spoke of her dream of seeing all Tamils of Sri Lanka (Ilankai) living in all equality in the places of their forefathers and we are certain that she is praying for same in the heavens!

Let us all make her dream come true!

**N. Vijayasingam**
Former advisor: European Union Embassy, New Delhi
Former Advisor: Ceylon Workers Congress, Colombo
Governing Councillor, University of Jaffna — 1779 - 1981
23 Mathews House, Epsom, Surrey KT18 7RX





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



The World Peace Organisation (UK) organized a conference in 2000 and Mrs Selvathy Sampanthan participated as delegate to the conference.



செசிறிக்கந்தராசா தலைமையில் நடைபெற்ற செந்தமிழ் வளர்த்ணத செம்மல்கள நூல் வெளியீட்டு விழாவில் திருமதி செல்வதி சம்பந்தன் கௌரவிக்கப்படுகிறார்.



TWAN முதியோர் சங்கத்தினர் திருமதி செல்வதி சம்பந்தனின் 65வத பிறந்தநாள் விழாவில் திருமதி புவனேஸ்வரி நடராசா.வாழ்த்துமடல் வாசித்து அளிக்கின்றார்



Youth Develpoment seminar organized by the World Peace Organisation in 1999.Mrs Selvathy Sampanathan participated as observer.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் சென்னையில் 2000ல் நடத்திய விழாவில்திரு.-திருமதி சம்பந்தன், திரு.பொன்பாலசுந்தரம்கௌரவிக்கப்படுகின்றனர்



Youth Develpoment seminar organized by the World Peace Organisation in 1999.Mrs Selvathy Sampanathan participated as observer.




அதே விழாவில் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படுகிறார்.



Mrs Sellammah having discussion with the Chairman, Anti Arms campaigner

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Asian Elderly centre called SUB-Co Staffs and employees celebrating Mrs Sellammah( Selvathy) 70th birthday at the Centre



எங்கள் குடும்பத் தலைவர் சித்தப்பா காசிப்பிள்ளை நடராசா குடும்பத்துடன் திருமதி செல்வி சம்பந்தன பிறந்தநாள் நிகழ்வொன்றில்




Mrs Sellammah is dancing with senior staff. In her birthday



with the sub-co Elderly Centre Staffs

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னாள் இந்துசமய விவகார அமைச்சர் தியாகராசா மகேஸ்வரன் இலண்டனில் திரு.ஐ.தி.சம்பந்தனின் இல்லத்திற்கு வரகை தந்திருந்த போது நூல ஒன்றை அமைச்சருக்கு வழங்கவதையும். அருகில் கவிஞர் நாகேந்திரன், நியூஹாம் கவுன்சிலர் போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது மகனின் [illegible] திருமணத்தின் போது



சிவயோகம்
**SIVAYOGAM**
(Charity Reg. No: 1050398 Since: 1995)

**Founder & Spiritual Leader**
*Sakthy Aanmeehach Chudaroli*
**Mr Nagendram Seevaratnam, ACA, ACMA**

## Arulmihu London Muththumari Amman Temple

180-186 Upper Tooting Road, Tooting, London SW17 7EJ
Tel: 020 8767 9881 Fax: 020 8711 5333
Email: sivayogam1050398@yahoo.co.uk Web: www.sivayogam.org



09 June 2010

அன்புள்ள திரு. ஐ. தி. சமபந்தன் அவர்களுக்கு வணக்கம்.

தங்கள் துணைவியாரின் பிரிவுச் செய்தி கேள்வியுற்று அதிர்ச்சியும், கவலையும் அடந்தோம்.

ஒவ்வொரு ஆணின் வெற்றிக்கும் ஒரு பெண் உறுதுணையாக இருப்பார் எனக் கூறுவார்கள். இந்த நியதிக்குத் தங்கள் துணைவியார் விதிவிலக்கானவர் அல்ல என்பதற்குப் பல துறைகளிலும் தாங்கள் அடைந்துள்ள சாதனைகளை உதாரணமாக குறிப்பிடலாம்.

இறைவனுடைய படைப்பில் இறப்பைத் தவிர்க்க முடியாது. வாழும்போது தமது கடமைகளைச் சீருடன் செய்து முடித்து படைத்த இறைவனுடைய பாதார விந்தங்களில் சரணடைந்துவிட்டார். அவரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை செய்வதே மேலானது.

அம்மா அவர்களின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல அருள்மிகு அன்னை முத்துமாரித் தாயின் பாதாரவிந்தங்களை வேண்டி நிற்பதுடன் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஓம் சாந்தி.

அன்னையின் சேவையில்

சீவரத்தினம்
"சக்தி ஆன்மீகச் சுடரொளி"
நாகேந்திரம் சீவரத்தினம்

**Patrons**: Dr K Nadesalingam, M.B.B.S.(Cey.),D.P.M.(Lond.),M.R.C.Psych.(UK) K.Kanendran, S. Yoganathan
**Chair**: Nimalan Seevaratnam, **Secretary**: S Rajendran, **Treasurer**: Dr J Saravanamuthu, **Deputy Chair**: K Thiyagarajah
**Ombudsmen**: K.Jegatheeswarampillai, Dr S.Gnanachelvan, S.Anandathiyagar **Administrator**: N.Karunanithy



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

"சைவசமயக் கருத்துணர்வினூடாகச் சமுகசேவை"

# Saiva Munnetta Sangam (UK)

*"Community Service Through Hindu Concern"*

2 Salisbury Road, Manor Park, London E12 6AB. Tel : 020 8514 4732 Fax: 01268 561805

Registered Charity No: 292085 www. **saivamunnettasangamuk .com**

*Vice Patrons*
Dr. (Mrs) Indra.Siva -yoham
Dr. V. Balasegaram
Mr. R. Pathmanathan

33rd Year Management Committee

*President & Trustee*
Mr. V. C. Vamananathan
0208 220 3810

*Vice President & Trustee*
Mr. S. Thamboo
**01689 857 639**

*General Secretary & Trustee*
Mr.D.Rabindramohan
020 8504 9353

*Treasurer & Trustee*
Mr. V. R. Ramanathan
01268 766624

*Trustees*
Mr.S. Balasingham
Mr. W. Nagaratnam
Mr. G. Parameswaran
Mr. C. Sithamparapillai
Mrs. P.Uthamakunan

*Building Project Secretary*
Mr.V. Jegendirabose

*Examination Secretary*
Mr. K. Sivagurunathapillai

*Membership Secretary*
Mr. S. Anandathiyagar

*Publication Secretary*
Mr.M.Yasotharan

*Religious Secretary*
Mr. M. Ravendradas

*Social Service Secretary*
Mr. P. Vilventhraraja

*School Secretary*
Mr.V.R. Loganathan

*Assistant Treasurers*
Mr.R.Sivanantharajah
Mr. S.Tharmaraja

*Committee Members*
Mr.K.Jegatheeswaran
Mrs.V.Kanagenthiran
Mr.R.Nadarajah
Mrs.P.Nadarajah
Mr.I.T.Sampanthan
Mr. V. Sellathurai

## இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

இறவாத இன்ப அன்பு
  வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
  பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
  வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
  அடியின்கீழ் இருக்க என்றார். – பெரியபுராணம் –

ஈழத்தின் வடபால் சைவத்தையும் தமிழையும் தம் உயிரெனப் போற்றும் காரைநகரில் பிறந்த திருமதி. செல்லம்மா சம்பந்தன் அவர்கள் மிகுந்த கடவுள் பக்தியும், தமிழறிவும் கொண்டவர். அவர் எமது சங்கத்துடன் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். எமது விழாக்கள் எதுவானாலும் தவறாமல் சமூகம் தருபவர். அத்துடன் பிள்ளைகளையும் நல்ல பண்பாளர்களாக வளர்த்து ஆளாக்கியுள்ளார். அவருடைய மறைவு எமக்கு மிகுந்த வேதனையை அளிக்கின்றது. அவர் எமது சமூகத்தின் மீது அளப்பரிய அக்கறை கொண்டு தன்னால் இயன்ற பல சேவைகளைச் செய்துள்ளார்.

அத்துடன் அவரது கணவர் திரு. ஐ.தி. சம்பந்தன் அவர்களின் சமுதாயப்பணிகளுக்கெல்லாம் துணையாக இருந்து அவருக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்தவர். அன்னாரது மறைவு அவரது குடும்பத்தினருக்கு ஈடுசெய்யமுடியாத ஒன்றாகும். அவரது பிரிவால் துயருறும் கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் உறவினர்கள் அனைவரும் பிரிவுத்தயரிலிருந்து மீளவும் அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத சிதம்பரேஸ்வரப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்

இப்படிக்கு
ஆட்சிக்குழுவினரின் சார்பில்

தர்ம. இரவீந்திரமோகன்
கௌரவ பொதுச்செயலாளர்
18-06-2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கள்ளமில்லா உள்ளம் கொண்ட அம்மா

அகமும் முகமும் மலர்ந்து நட்போடு முயற்சியுள்
கனிவாகக் கருத்துரைத்து சுடர்விடும் சேவகன்
ஐ தி. சம்பந்தன் அவர்களின்
கருத்துறு கவிபுனைய எழுந்த என்கை
இலண்டன் கன்னி வெய்யிலின்
அம்மா செல்லம்மாவின் அதிர்வுச் செய்தி
கவியும் துயரத்தில் கருக்கி இசைக்கிறது.

"கண்ணாக் குஞ்சு நவஜோதி
என்னடா செல்லம்.?
இப்பதாண்டா கண்ணா
கடைக்குப் போட்டார் அப்பா.
இப்ப அஞ்சு நிமிசத்தில வந்திடுவார் கண்ணா
வந்தவுடன் குஞ்சு நீ
போன் எடுத்த செய்தி
சொல்லுவேன்டா கண்ணா .
என்னோட கோபிச்சுப் போடாத குஞ்சு
நானும் சிலவேளை மறந்திடுவேன் கண்ணா."

கள்ளமில்லா உள்ளம் கொண்ட
அம்மா! அருமைத் தாயே உங்கள்
கனியும் இந்த மொழியிழந்து என்
கண்கள் நனைஞ்சு போகின்றது..
அன்னையே அன்புத் தாயே!
தூங்கம்மா தூங்கு
நிம்மதியாகத் தூங்கு
தலை தாழ்த்தும் எங்கள்
நிறைவான அஞ்சலி.

**நவஜோதி ஜோகரத்தினம்**
அகஸ்தியர் குடும்பம் சார்பில் - இலண்டன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ மங்கை செல்வதி சம்பந்தன்

நாகரீக உலகின் மாற்றங்கள் சிறப்பு மனிதர்களின் உழைப்பினாலேயே உருவாக்கப்பட்டன. மனிதர்களில் பெரும்பாலானோர் சிறப்பியல்புகளையும், கடமைகளையும் உணர்ந்து செயற்படுபவர்களே!. இன்று நாம் வாழும் இந்தச் சிறப்பு வாழ்க்கையானது இப்படியான சிறப்பு மனிதர்களின் உழைப்பினால் உருவாக்கப்பட்டதே!

காரைநகரில் படிதாண்டாமலும், அடுப்பு ஊதவுமே பெண்கள் என்று இருந்த காலத்தில், நாகரீகம் இதற்கும் மேல் உள்ளதை உணர்ந்த வேகம் கொண்ட பல பெண்களுள் திருமதி. செல்லம்மா சம்பந்தனும் குறிப்பிடத்தக்கவர். தனது ஆரம்ப கல்வியைத் தொடர்ந்து மேற்படிப்புக்களை மேற்கொண்டும் - அதுவும் தனது விருப்பதின்படியே பின்னர் தான் பெற்ற கல்வியையும், அறிவினையும் சமூகத்தின் வளர்ச்சிக்காகத் தனது உழைப்பை வழங்கியவர். இதற்கான பல காரணங்களை இந்த நினைவு மலரிலேயே காணமுடியும்.

இதைவிட சமூகத்தின் அன்றைய காலகட்டத்தில் சமூகத்தில் நடபெற்ற பல்வேறுபட்ட நிகழ்வுகளுடன் இணைந்து செயற்பட்டவர் திருமதி செல்லம்மா சம்பந்தன். தமிழ்ப் பேசும் மக்களில் இப்படிச் செயற்பட்ட பல ஆயிரக்கணக்கான குடும்பங்களில் இவரது குடும்பமும் ஒன்றாகும்.

தமிழ்ப் பேசும் மக்களின் ஆரம்பகால போராட்டங்களில் இவரது குடும்ப உறுப்பினர்கள் பாதிக்கப்பட்டுச் சிறையிலிருக்கும் போதும் திருமதி. செல்லம்மா சமூகத்தில் போராடிக் கொண்டிருந்த போராளிக் குழுக்களுடன் இரகசியத் தொடர்புகளை வைத்திருந்து இரகசியமாக உதவிகள் பலவற்றைச் செய்திருந்தமை பலருக்குத் தெரியாத ஒன்றாகும்.

திருமதி செல்லம்மா அவர்கள் தமிழ் அமைப்புக்களுக்குப் பிரசுரங்களை வெளயிடுவதற்காக இரவு பகலாக விழித்திருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை அச்சடித்து உதவியவர். அன்னாரது இந்த உதவிகளைப் பெற்றவர்களில் நானும் எனது தோழர்களுமே இன்று வாழ்கின்ற ஆதாரங்களாகும். இது அவர் சமூகத்தின்மீது கொண்டிருந்த அக்கறையைப் பிரதிபலிப்பதுடன் அவரது துணிவுக்கும், வேகமான ஆற்றலுக்கும் நல்ல உதாரணமாகும்.

தமது பெற்றோர் வழிவந்த வளர்ப்புப் பெற்ற செல்லம்மா அவர்களை யாரும் சைவ அடையாளங்கள் அற்ற பெண்ணாக என்றுமே பார்த்ததில்லை. அவர் தமது வாழ்க்கையின் இறுதிக் கட்டம் வரையில் (சிவத்தினை) சைவ மரபை இழந்துவிடாது இறைவனடி சேர்ந்தது அவரது சைவப் பண்பினையே எடுத்து இயம்புகின்றது.

இப்படியாக வாழ்ந்த சைவ மங்கையின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திப்போமாக

ஓம். சாந்தி

ஜமனர
(காரைநகர் மக்கள் சார்பாக த. சோதிலிங்கத்தினால்
எழுதப்பட்டது.)

சர்வதேச காரை அபிவிருத்தி ஒன்றியம்
International Karai Development Union



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை
Sri Durgadevi Devasthanam
Tellippalai, Sri Lanka
Tel: 0602 213151

# செஞ்சொற் செல்வர் திரு ஆறு திருமுருகன் அவர்களின் பிரார்த்தனையுரை

புகழ்பூத்த சமூக சேவையாளர் திரு ஐ.தி.சம்பந்தன் அவர்களின் பிரியபத்தினி காலமான செய்தியறிந்து மிகுந்த வேதனையடை கிறேன். சம்பந்தனின் பல்வேறு துணிகரமான பணிகளுக்கு மிகுந்த பக்கபலமாக விளங்கியவர் அம்மையார் அவர்கள்.

மனையறத்தின் வேராக விளங்கிய அம்மையாரின் பிரிவு சம்பந்தன் குடும்பத்திற்குப் பேரிழப்பாகும். நலலைநகர் நாவலர் பெருமானின் உருவச்சிலை நிறுவும் பணி முதலாய் வேறு சமய சமூகப்பணி களால் மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர் திரு சம்பந்தன் அவர்கள். அவருக்குத் தக்க துணையாக நின்று தொண்டுப் பணிகளில் அக்கறை கொண்ட அம்மையாரின் பணிகள் மறக்க முடியாது. அன்னார் ஆத்மசாந்தி பெறப் பிரார்த்தித்து அமைகிறேன்.

ஆறு திருமுருகன்
தலைவர்
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலண்டன் தமிழ்ச் சங்கம்**

## எங்கள் கண்ணீர் அஞ்சலி

இலண்டன் தமிழ்ச் சங்கம் தங்கள் அன்பத் துணைவியார் திருமதி செல்வதி சம்பந்தன் [illegible] அவர்களின் திடீர் மறைவு குறித்து தனது ஆழ்ந்த அனுதாபங்களையும், வருத்தங்களையும் தெரிவித்துக் கொள்கின்றது. அம்மையார் அவர்கள் தமிழ்கூறும் நல்லுலகத்திற்கும், சைவசமய முன்னேற்றத்திற்கும் ஆற்றிய அரும் பணிகள் என்றும் நினைவு கூரத்தக்கது என்பது திண்ணம். அவர்களின் இழப்பு ஈடுசெய்ய முடியாததொன்று என்பதனையும் எல்லோரும் ஒருமனதாக ஏற்றுக் கொள்வர்.

மேலும் பத்திரிகைப் பிரதேசத்தில் பயணிப்பது என்பது அக்கினிப் பரவேசத்திற்குச் சமானம் என்பது எல்லோரும் அறிந்ததே. இருப்பினும் அம்மையார் தங்களோடு இதயத்தின் இதயமாகச் சுடரொளி உதயத்தின் உதயமாகப் பத்திரிகைப் பணியில் மனந் தளராமல் பெரும் பங்கு கொண்டு, உலகவாழ் தமிழ் மனங்களில் அருஞ்சுடர் அறிவொளி பரப்பி ஆற்றிய தொண்டுகள் காலவெள்ளத்தால் அடித்துச் செல்ல முடியாதவை என்பதனை எங்கள் நெஞ்சில் நிறுத்தி அன்னையாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

என்றும் நினைவுகொள்ளும்
**இலண்டன் தமிழ்ச் சங்க அமைப்பு**

**அ. உதயகுமாரன்**
**செயலாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரை நலன்புரிச் சங்கம் - பிரான்சு
(ஆரம்பம் 24.04.2006)

L'ASSOCIATION CARITATIVE KARAI FRANCE

11, Rue Georges Magnier - 93120 La Courneuve
email : Karaicaritative@yahoo.com

l'association déclaration N° : W931000379

# சிந்தனைக்கு உரம் ஊட்டியவர்

காரை நலன்புரிச் சங்கம் - பிரான்சு
காரைநகர் மக்கள்

ஈழத்து வடபால் அமைந்த சிவபூமியில் காரைநகர்தனில் மாண்புடன் 20. 10. 1938 அவதரித்த அன்புள்ளம் கொண்ட செல்வமகள் செல்வதி (செல்லம்மா) ஆவார்.

செல்வதி அவர்கள் சமூகசேவையாளராகவும், கணக்காளராகவும் ஆற்றிய சேவைகள் பலவற்றை எம்மவர்கள் யாவரும் அறிவர். உங்கள் சிந்தனைக்கு உரம் கொடுத்தாற்போல் உற்ற துணையாகக் காரைநகர் பெற்ற பெரும் சேவையாளர் ஐ. தி. சம்பந்தன் ஐயா அவர்களை கரம் பிடித்து இல்வாழ்க்கை இனிதே வாழும்கால் ஞானக் குழந்தைகள் ஆன ஞான வடிவேல், ஞான ஆனந்தன், ஞான லிங்கம் ஆகிய மூன்று ஆண் மக்களைப் பெற்று நல்லபடி வளர்த்தெடுத்து உற்றார் உறவினர் போற்றும் உத்தமியாக வாழ்ந்தவர்.

சம்பந்தன் ஐயாவின் சிந்தனைக்கு உரம் ஊட்டி காலம் முழுமையும் உதவிபுரிந்த தங்களை இழந்து தவிக்கும் ஐயாவுக்கும், பிள்ளைகளுக்கும், உற்றார் உறவினர்களுக்கும் எப்படி ஆறுதல் கூறமுடியும் எனத் தவிக்கின்றோம்.

செல்வதி அம்மா அவர்களின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல ஈழத்து தில்லைக் கூத்தனை வேண்டி நிற்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மூதறிஞர் சிவத்திரு. வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களின் அனுதாபச் செய்தி.

என் பேரன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய
திரு. ஐ.தி.சம்பந்தன் அவர்களுக்கு

உங்கள் மனைவியார் காலமான செய்தியை அறிந்து அதிர்ச்சியும் கவலையும் அடைந்தேன். அவருடைய ஆத்மா சாந்தியடைக.
உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றேன். நிற்க.

பிறப்பும் இறப்பும் உலக இயற்கை. நாங்கள் ஒருவர் முன்னும் ஒருவர் பின்னுமாக மரணமடையப்போகின்றோம்.

எனவே துக்கத்தை ஒழித்து நிம்மதியாக வாழ்வோமாக. நடுக்கம் நன்கு எழுத முடியவில்லை. சிறிது காலமாக எனது உடல் நிலை திருப்தியாக இல்லை. ஒருவிதமாக இயங்கிக் கொண்டிருக்கிறேன்

உங்கள் அன்பும் பண்பும் மறவாத

**க. வைத்தீஸ்வரக் குருக்கள்**
காரைநகர்.
கந்தரோடை, சுன்னாகம்
ஸ்ரீலங்கா
14-06-2010


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திக்கரை முருகன் ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர்
# அனுதாபச் செய்தி

அமரர் திருமதி செல்லம்மா சம்பந்தன் அவர்கள் நான் சிறு பிராயத்திலிருந்த காலத்தில் எமது தந்தையாருடன் நீண்ட கலந்துரையாடலில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததைப் பல சந்தர்ப்பங்களில் அவதானித்திருக்கிறேன். அவர்களுடைய உரையாடல்கள் அநேகமாக ஆன்மீகம் சம்பந்தமாக இருந்தன. அவரைப்பற்றி எனது தந்தையாருடன் வினவிய போது அவர் தனது மாணவி எனவும் போக்குவரத்துச் சபையில் கணக்காளராகப் பதவி வகித்து வருகிறார் எனவும் அறியத் தந்தார்.

அதன் பின் நீண்ட இடைவேளிக்குப் பின் திருநெல்வேலிப் பகுதியில் ஒரு கோயிலில் வெண்ணீறணிந்த நெற்றியுடன் தரிசனம் செய்து விட்டு தினமும் செல்வதைக் கண்டு செல்வதி அவர்களின் பக்தியையும் ஆன்மீகத்தில் கொண்ட ஈடுபாட்டையும் உணர்ந்தேன்.

அக்காலத்தில் ஒருநாள் என்னை நானே அறிமுகம் செய்து கொண்ட பொழுதுதான் எமது தந்தையாரின் பிரியமான மாணவி எனவும், தாம் எப்போது அவரைச் சந்தித்தாலும் ஆன்மீகம் சம்பந்தமான விடயங்களில் ஈடுபடுவதை நினைவூட்டியதோடு என்னைச் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி அடைந்ததாகவும் அவா கூறியது இப்போது நடந்த ஒரு சந்திப்புப் போல என் மனக் கண் முன் நிற்கிறது.

பின்னா் அன்னாா் தம் குடும்பத்தோடு வெளிநாடு சென்று வாழ்கிறார் எனக் கேள்வியுற்றேன்.அன்னாரது மறைவுச் செய்தி அதிர்ச்சியளித்ததோடு மிக மனவருத்தத்தையும் ஏற்படுத்தியது.அன்னாரது ஆத்மா சாந்தியடைய திக்கரை முருகனைப் பிரார்த்திக்கின்றோம்

**சிதம்பரப்பிள்ளை கந்தையா பொன்னம்பலம்**
நம்பிக்கைப் பொறுப்பாளா
திகரை முருகன் ஆலயம்
களபூமி, காரைநகா்
20-06-2-10-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையம்

Chulipuram Sri Amma Bhagavan Satsankam
சுழிபுரம், யாழ மாவட்டம், இலங்கை
Jaffna District, Srilanka
T.P. No: 021 3217552, 077 7651719, 077 1242784

காரை மாதா பெற்றெடுத்த உத்தமி

அமரத்துவம் அடைந்த திருமதி செல்லம்மா சம்பந்தன் அவர்களின் மலர்ந்த முகமும் எல்லோரிடமும் இதய சுத்தியுடனும் சைத்தன்யத்துடனும் பழகி உபசரிக்கும் பண்பும் கணவரைத் தெய்வம் போல் மதித்து அவரது பொதுப் பணிச் சேவைகளுக்கு உறுதுணையாக நின்று ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்த வேளை அவரது திடீர் மறைவு அதிர்ச்சியையும் மன வேதனையையும் ஏற்படுத்தி விட்டது. அவரது பூதவுடல் அழிந்தாலும் ஆத்மா என்றும் பக்கத் துணையாக இருந்து கணவரது நற்பணிச் சேவைகளை மேலும் முன்னேற்றகரமாகச் செய்து வரவும் குடும்ப உறவுகள் அனைவரையும் பாதுகாத்துக் கொள்வதற்கு அனுக்கிரகம் அளிப்பார். அவரது மறைவு தினத்தை இலங்கையில் யாழ்ப்பாணத்தில் காரைநகர் பாலாவோடை குறிஞ்சாக்குளி முத்துமாரியம்மன் தேர்த்திருவிழா நினைவு கூறத்தக்கதாக அமைந்துள்ளமை எல்லாம் இறை செயல் ஆகும். அன்னாரின் ஆத்மா சாந்தி பெற ஸ்ரீ அம்மா பகவானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.
எஸ்.கே. சிவலிங்கம் குடும்பம்

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையம்
யாழ், இலங்கை.
20-06-2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "விளையும் பயிரை முளையில் தெரியும்"

எங்களைப் பெற்று வளர்த்து பெருமையுடன் வாழச்செய்யும் காரை அன்னை நெய்தல், முல்லை, மருதம் அரண்செய அழகாக வீற்றிருக்கிறாள். காரை மண்ணில் உதித்தோர் செந்தமிழும் சிவநெறியும் சேர்ந்து இயங்க உலகெல்லாம் உயர்பணி செய்கிறார்கள்.

காரைநகரில் தங்கும் புகழுடை தங்கோடை செம்பாட்டில் வளமான வர்த்தகராம் வேலுப்பிள்ளை தம்பதிகட்கு கனிஷ்ட புதல்வியாகச் செல்வதி பிறந்தார். ஒரு தமையனாரும் இரண்டு அக்காமாரும் அவரது உடன் பிறப்புக்கள் ஆவர். "விளையும் பயிரை முளையில் தெரியும்" அன்றோ செல்வதியும் சிறுவயதிலேயே சுறுசுறுப்பானவராகவும் கல்வியிற் கருத் தூன்றிப் படிப்பவராகவும் விளங்கினார். அவரது இல்லத்துடன் இணைந்து இருந்த தந்தையின் வர்த்தக நிலையத்திலும் தந்தைக்கு உதவியாக வர்த்தகம் செய்வார். ஆங்கில மொழிமூலம் உயர்கல்வியை வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்று சிறப்புப்பட்டம் பெற்றார். பட்டம் பெற்றபின் இலாபத்தில் உயர்நிலையில் அந்நாளில் இயங்கிய இலங்கை போக்குவரத்துச் சபையில் கணக்காளராகப் பணி செய்தார்.
காரைநகர் மாணவர்கள் விளங்காத பாடங்களில் விளக்கம் பெற செல்வதியை நாடுவார்கள். அவரும் மிகத் தெளிவாக அப்பாடங் களை விளக்கம் செய்வார். அதற்கு அவர் பணமோ பிரதி உபகாரமோ பெறுவதில்லை.

திருமணப்பருவம் எய்திய செல்வதிக்கு பெற்றோர் காரைநகர் களபூமி வழுப்போடையைச் சேர்ந்த துறைமுகக் கூட்டுத்தாபனத்தில் பணிசெய்த பிரபல சமூக சேவையாளர் ஐ.தி சம்பந்தனுக்குத் திருமணம் செய்து வைத்தனர். பெண்ணிற் பெருந்தக்கயாவன என்ற வான்புகழ்வள்ளுவர் குறளிற்கு "பெண்ணிற் பெருந்தக்க இல" எனப் பொறுப்புள்ள பெண்மணி யாக இல்லறத்தை நல்லறமாக நடாத்தினர். மங்கலமான மனைமாட்சியில் நன்கலனாக நன்மக்கள் மூவரைப் பெற்றிடுத்தார். ஏழுபிறப்பும் தீயவை தீண்டா பண்புடை மக்களைப் பெற்றுப் பாலூட்டி சீராட்டிப்பக்குவமாக வளர்த்தார். உரிய வயதில் பாடசாலையில் படிக்க வைத்து கல்வியாளர் களாகச் செய்தார். பருவமடைந்த பிள்ளைகளுக்கு உரிய மணமக்களை திருமணம் செய்து வைத்தார். தன் குமாரர்களின் குழந்தைகளது மழலை மொழியில் சம்பந்தன் தம்பதியினர் மகிழ்ச்சி அடைந்தனர்.

அவர்களது மகிழ்ச்சி துயரக் கடலாக மாற அமரர் செல்வதி அன்புக் கணவர் இன்பப் பிள்ளைகள் பேரக்குழந்தைகளைப் பிரிந்து ஈழத்துச் சிதம்பரம் தில்லைக் கூத்தன் திருவடி சேர்ந்தார். அன்னாரது ஆன்மா இறைவனடி இணைந்து சாந்தி பெற தில்லைக்கூத்தனை வணங்குவோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**புலவர் பூரணம்**
**– கொழும்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவில் இருந்து ஒரு உதிர்வு

அக்கா என்று தான் அழைப்பேன். 1984 பிற்பகுதியில் ஒருநாள் மாலை அவசரமான நேரத்தில் அக்கா அறிமுகமானார். அச்சு எழுத்துக்கள் கோர்க்கப்பட்ட கொம்போஸ் கெலியுடன் அவர் எமது அச்சகத்தில் நுழைந்தார். மறுநாள் வெளிவர வேண்டிய ஒரு மலரின் பகுதிகள் அவை. யாழ் மண்ணில் அப்போது எதுவும் எப்போதும் நடக்கலாமென்ற காலச்சூழ்நிலை இருந்தது. ஒரு நிறுவனம் திறக்கப்படுவதோ அடைக்கப்படுவதோ நமது கட்டுப்பாட்டில் இல்லை. எமது அச்சகத்தில் தன்னியக்க அச்சுயந்திரம் இருந்தமையால் அவரது கோரிக்கையை நிறைவேற்ற முடிந்தது. அன்று தான் அவர் அண்ணன் ஐ.தி.சம்பந்தன் அவர்களின் துணைவியார் என்றும் தெரிந்தது. அரசியல் சூழ்நிலைகளால் அண்ணன் வெளியில் இருந்ததாக அறிந்தேன். அத்துடன் உடல்நலமற்ற நிலையிலும் இருந்ததாக அக்கா சொன்னதாக ஞாபகம்.

அந்தச்சந்திப்பின் பின்பு, அவரை அடிக்கடி பார்ப்பதுண்டு. தொழில் ரீதியாகவும் அண்ணன் பற்றியும் செய்திகளை அறிவதாகவும் அது அமைந்திருந்தது. ஐ.தி. சம்பந்தன் அவர்களுடன் நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன் 'மொழிவழி தொழிற்சங்க' காலத்து அறிமுக முண்டு அக்காவுடன் கதைப்பதில் அந்தப் பழைய நினைவுகள் மீட்கப்படும். அது ஒரு மன ஆறுதலாக அன்று இருந்தது.

அண்ணன் வீட்டை நேசித்தாலும் நினைப்பது குறைவு. பொது விடயங்களில் நேரத்தைக் கழித்து விடுபவர். ஆகவே அக்கா சுமை அதிகமானதாகவே இருந்தது. குழந்தைகளின் வளர்ப்பு, படிப்பு, 'சுடரொளி' நிர்வாகம், அப்புறம் எழும் பிற விடயங்களின் பாதிப்புகள் எல்லாவற்றையும் எதிர்த்து எதிர்நீச்சல் போட்டுக்கொண்டிருந்தார். வெயிலும் மழையும் வேதனைகளும் அவருக்கு அத்துப்படி. அவற்றிற்காக அரண்டு போனதில்லை. எதுவும் மனம் சோரப்பண்ணியதில்லை. முகம் வாடச் செய்ததுமில்லை. கலக லப்பான பேச்சு, கரு எனச்சுரக்கும் ஆறுதல் வார்த்தைகள், அழுத்தமான ஆங்கில அறிவு பளிச்சென்று தெரியும் வெண்பற்களின் ஒளிரும் சிரிப்பு, கம்பீரமான தோற்றம், காற்றில் அசையும் சுருட்டை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிகள், குங்குமம் சுமக்கும் நெற்றி தன் துணைவருக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட 'வாழ்க்கைத் துணைக்கலம்' இத்தியாதி அம்சங்கள் தான் அக்கா அது திருமதி ஐ.தி. சம்பந்தன். இவர் கால்மார்க்ஸின் ஜென்னியைப் போல, கணவனுக்காக வாழ்ந்தவர்.

இன்று அண்ணன் அடிவேரைப் பெயர்த்தெடுத்த ஆலமரம், அரைவாசியான அரத்த நாரீசுவரர். இந்த இழப்புக்கு எப்படி ஆறுதல் சொல்வது! சொற்கள் வரவில்லை.
அக்கா என்றும் 'வனத்தக்கான் வாழ்க்கைத் துணை' ஆனவர். இந்த உதிர்வு உதிர்வு தான். வெற்றிடம் வெறுமையாகவே இருக்கும். குழந்தைகட்கும் அண்ணனுக்கும் அந்த 'வெறுமை' தான் தொடர்கதை.

மா. குலமணி
19 -5/4 பிறட்றிகா வீதி
கொழும்பு, இலங்கை
14-06-2010





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் செல்வதி நினைவாக...

பொதுநலப் பணிகளை எல்லாம் சீராகச் செய்வது, அன்பாக உபசரிப்பது, நல்ல ஆக்கங்களுக்கு எல்லாம் ஆதரவு கொடுப்பது, பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாப்பது, குடும்பப் பொறுப்பைப் பேணுவது போன்றவைகளில் திருமதி. செல்வதி சம்பந்தன் அவர்கள் ஒரு தனித்துவம் வாய்ந்தவராக விழங்கியவர் என்பதை இச்சமயத்தில் பதிவுசெய்வது பொருத்தமாக இருக்கும்.

கல்விச் செல்வத்தில் அவர் உயர்வடைந்தும் கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு என்பதற்கமையப் பெருமை கொள்ளாது வாழந்தவர். இல்லறம் என்னும் நல்லறத்தைச் சீரும் சிறப்புமாக நடத்திய பெருமைக்கு உரியவர். தமது மூன்று புதல்வர்களையும் கல்வியில் மேல்நிலைக்குக் கொண்டுவந்தது மட்டுமல்லாமல் சீரும் சிறப்புமான இல்லற வாழ்க்கை அமைப்பதற்கும் பல தியாகங்களைச் செய்தவர்.

இலங்கையிலும், இலண்டனிலும் அன்னாரது கணவர் திரு. சமபந்தன் அவர்கள் ஆற்றிவந்த சமய, சமூக, அரசியல், சுடரொளி வெளியீடு போன்ற சகல பணிகளிலும் அவருக்குத் துணையாகவும், பக்கபலமாகவும் இருந்து உதவியவர். நோய்வாய்பட்டு இருந்த காலத்திலும் கணவனின் பணிகள் தொடரவேண்டுமென்ற ஆர்வத்துடன் உதவியவர்.

1977 கலவரத்தின்போது பாதிக்கப்பட்ட எமது மக்களை முகாம்களில் வைத்துப் பராமரித்த சமயத்தில் திருமதி சம்பந்தன் அவர்கள் அங்கு பணி யாற்றியபோது அவரைச் சந்தித்தது இன்றும் நினைவிலிருக்கிறது. புனர் வாழ்வுக் கழகத்தின் முக்கிய தொண்டராக அவர் சிறப்புப் பணி ஆற்றியவர்.

செல்வதி அம்மையார் போன்ற உண்மையான தொண்டர்களினால் புடம்போட்டு வளர்க்கப்பட்டதுதான் தமிழ் மக்களின் அபிலாசைகள். தமிழ் மக்களின் ஆசைகள் நிறைவேறுவதில் ஏற்பட்ட தாக்கங்களைப் பொறுக்க முடியாமல் அவர் உறங்கிவிட்டார் என்றுதான் நான் நினைக்கறேன்.

செல்வதி அவர்களின் அன்பான வார்த்தைகள் அமைதியாகிவிட்டன. இனி அவரது கனிவான, அன்பான, பண்பான வார்த்தைகளைக் கேட்பதற்கில்லை. அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்ளைத தெரிவித்துக் கொள்கிறேன். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

**செ. இரவீந்திரன்** (சட்டத்தரணி)
அவுஸ்திரேலியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எல்லாம் விதித்தபடிதான் நடக்கும் என்றிருக்கும் போது நீ கவலைப்பட்டு என்ன ஆகப்போகிறது?**

இந்த உலகில் எதுவும் நிச்சயமில்லை. இரண்டைத்தவிர. ஒன்று வரி. மற்றது மரணம்.

ஓவ்வொரு உயிரும் கருவறையில் இருக்கும் போதே கல்லறை நோக்கிய பயணத்தைத் தொடங்கிவிடுகிறது. எனவே தான் உயிரினை மீட்டு வரும் முயற்சி 'மரணத்திற்கும் உயிர்த்தெழு தலுக்கும் இடையிலான முயற்சி 'எல்லா மதங்களிலும் காணக் கிடக்கின்றன.

மனிதன் நாகரிகம் அடைந்த காலம் தொடக்கம் மரணத்தை வெல்லும் உபாயத்தைத் தேடி அலைந்து வருகிறான். இதுவரையில் வெற்றி கிடைக்கவில்லை. காரணம் மரணம் என்பது இயற்கையின் நியதி. அதை யாரும் வெல்ல முடியாது. இருந்தும் நமது சித்தர்களும் முத்தர்களும் ஞானிகளும் முனிவர்களும் மரணத்தை வென்று பெருவாழ்வு வாழ பெரு முயற்சி செய்துள்ளார்கள். திருமூலர் கூட இதற்கான வழிமுறைகளைப் பற்றிப் பேசுகிறார்.

மரணத்தை வெல்ல முடியாத திருமூலர், திருவள்ளுவர், சாத்தனார், பட்டினத்தார், பதணெென்சித்தர்கள், வள்ளலார் போன்றோர் வாழ்க்கை நிலையாமை பற்றிப் பாடியுள்ளார்கள். திருமூலர் அருளிய திருமந்திரத்தின் முதல் தந்திரமே யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை பற்றியது தான். திருவள்ளுவர் நிலையாமை பற்றி ஒரு அதிகாரமே வகுத்துள்ளார்.

நிலையாமையைப் பற்றி திருமூலர் சற்றுப் பச்சையாகவே சொல் கிறார்.

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே (திருமந்திரம் 148)

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தாரே! (திருமந்திரம் 318)

மனிதன் இறந்தபிறகு எல்லோரும் கூடி அழுதுவிட்டுப் பின்பு அவனுக்குப் பிணமென்று பெயர் வைத்து அதை எடுத்துப் போய் சுடுகாட்டிலே வைத்து எரித்து விட்டு ஆற்றிலோ அல்லது குளத்திலோ மூழ்கி எழுந்து அவனைப் பற்றிய நினைவை ஒழித்து விடுகிறார்களாம்.

இன்று கூட ஒருவர் இறந்து விட்டால் அன்னாரின் பூதஉடல் மயானத்துக்கு எடுத்துச் சென்று தகனம் செய்யப்படும் என்று தான் சொல்கிறோம். அவரது பெயரைச் சொல்வதில்லை. பேரும் புகழும் மனையும் மக்களும் போவது மட்டுமல்ல ஒருவரது பெயர் கூடக் கடைசியில் போய் விடுகிறது. காலம் நினைவையும் அழித்து விடுகிறது.

சாத்தனார் பாடிய மணிமேகலையில் நாகர்களின் தலைவனுக்கு சாதுவன் கூறும் அறிவுரைகளில் நிலையாமைக் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன.

'பிறந்தவர் சாதலும் இளமை செல்வம் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்றது உண்மையின்
நல்அறம் செய்வோர் நல் உலகு அடைதலும்
அல்லது செய்வோர் அருநரகு
அடைதலும்' (மணி 16 86-89)

மேலும் யாக்கை, இளமை, செல்வம் ஆகியவற்றின் நிலையாமை பற்றி சாத்தனார் விசாகை தன் மாமன் மகள் தருமதத்தனுக்குக் கூறும் அறிவுரை மூலம் விளக்குகிறார்.

'இளமையும் நில்லா, யாக்கையும் நில்லா
வளவிய வான்பெரும் செல்வமும் நில்லா
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத்துணை யாவது"

காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா என்றும் வாழ்வது மாயம், மண்ணாவது திண்ணம் என சித்தர்கள் பாடியிருக்கிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையாமை என்பது வாழ்க்கை மீது ஏற்பட்ட விரக்தி காரணமாகச் சொல்லப்பட்டதன்று. வாழ்க்கையின் நிலையாமையை உணர்ந்து மனிதன் வாழும் போதே அறம் செய்தல் போன்ற உயர்ந்த நெறிகளைக் கடைப்பிடித்து வாழ வேண்டும் என்பதை வலியுறுத்தவே சொல்லப்பட்டது.

உடலுக்கும் உயிருக்கும் உள்ள உறவை வள்ளுவர் முட்டைக்கும் அதிலிருந்து வெளியேறும் பறவைக்குமுள்ள உறவாக உவமித்துச் சொல்கிறார்.

குடம்பை தனித்து ஒழியப் புள் பறந்தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு. (குறள் 338)

இறப்பு என்பது அனைவருக்கும் பொதுவானது என்கிறார் பட்டினத்தார். 'முடிசூடும் நாடாளும் மன்னரும் அவர் அடிதழுவி வாழ்வாரும் இறுதியில் வேறுபாடின்றி இறந்து பிடிசாம்பலாய்ப் போவது உறுதி.

பட்டினத்தார் மானிட வாழ்க்கையின் முடிவு பற்றி அழகாகச் சொல்கிறார்.

'அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே விழியும்பொழுக
மெத்திய மாதரும் வீதி மட்டே - விம்மி விம்மியிரு
கைத்தலைமேல் வைத்துஅழும் மைந்தரும் சுடிகாடுமட்டே
பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே!

இந்தப் பாடலையே கவியரசர் கணதாசன் எல்லோரும் புரியும் வண்ணம் பாடியிருக்கிறார்.
வீடுவரை உறவு.- வீதி வரை மனைவி, காடு வரை பிள்ளை-கடைசி வரை யாரோ?

எல்லாம் விதித்தபடிதான் நடக்கும் என்றிருக்கும் போது நீ கவலைப்பட்டு என்ன ஆகப்போகிறது?

**திரு தங்கவேல்**
கனடா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையின் நினைவிலிருந்து..

தன்னலமற்றுப் பொதுநலம் பேணிவாழும் தாய்மார்களில் அமரர் செல்வதி அன்னையின் வாழ்க்கை வரலாறு பொன்னெழுத்துக்களால் பொறிக்க வேண்டியுள்ளது. கல்விச் செல்வத்தில் உயர்வடைந்தும்" கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு" என்ற பதத்திற் கிணங்க பெருமை கொள்ளாது மிகவும் எழுமையுடன் இல்லறம் எனினும் நல்லறத்தை சீரும் சிறப்புடனும் நடத்திவந்தவர்.

அன்னை அவர்கள் மூன்று முத்துக்கள் போன்ற மூன்று ஆண் பிள்ளைகளைப் பெற்று கற்றோர் சபையில் மதிக்கப்படும் வண்ணம் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறப்புடன் வளர்த்து அவர்களுக்கு சிறந்த இல்லற வாழக்கையையும் ஏற்படுத்திக் கொடுத்த பெருமைக்குரியவர்.

அமரர் செல்வதி அவர்கள் இலங்கைப் போக்குவரத்துச் சபையில் உயர் பதவி வகுத்த காலத்தில், கடமையுணர்வுடனும், நேர்மை யாகவும் சேவையாற்றி பாராட்டையும் நற்பெயரையும் பெற்றுக் கொண்டவர்

அன்னையின் கணவர் திரு. சம்பந்தர் அவர்கள் இலங்கையிலும் இலண்டனிலும் ஆற்றிய சமய, சமூக, இலக்கியத் தமிழ்ப் பணிக ளுக்கு எவ்விதத்திலும் இடையூறாகவில்லாது, அவருடைய சேவைகள் அனைத்துக்கும் ஒத்துழைப்பு நல்கி வந்த சேவை உணர்வு கொண்டவர்.

திரு. சம்ாந்தன் அவர்களின் " சுடரொளி " வெளியீட்டு நிருவாகத் திலும் பெரும்பங்கேற்றுச் சிறப்புடன் வெளிவர உதவி வந்தவர்.

அன்னை அவர்கள் நோயுற்ற காலத்திலும் கணவரின் பணிக்குத் தடங்கள் ஏற்படாமல், தன் உடல் நலத்தையும் பொருட்படுத்தாது அவருடைய சேவைகளுக்குப் பக்கபலமாக இருந்தார்கள்.
நான் அறிந்த, அவருடன் பழகிய காலத்திலிருந்து அவருடைய அரிய குணங்கள். எளிமையான வாழ்க்கை முறை. எவரையும் நோகாமல் அறிவுரை கூறி அவர்களைப் பண்படுத்தும் தன்மை, விருந்தோம்பும் பண்பு என்பனவாகும். ஒரு குடும்பத் தலைவியாக, வழிகாட்டியாக. தமிழ் உணர்வாளராக வாழ்ந்து சிவபதம் அடைந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

**க. சிவஞானம்**
(மாவட்டபுரம்)
ஷூசியம், இலண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**FROM : SHOBANA U. S. A**

Dear Uncle

Though she is not with us physically, she still lives in our hearts. All the deeds she has done, will always be remembered. Just be happy and thankful that God has sent you this wonderful Angel in your life to promote all your skills and be with you in all ups and downs of life and love you with all her heart. In a way, it is better she left this world so that she will not have any more sufferings. This is God`s wish, Uncle. Remember she is now in God`s hands - the most secure place in the universe. So, do not worry. God is with you to help you overcome this pain.

**From: MARY AND NIMALAN**

Please accept our heartfelt sympathy at this time of your loss. We are really sorry for that we could not attend the funeral. We hope that you and your family will recover from this sad loss.

Mr & Mrs. Nimalanayagam
Tamil Community Housing Association Ltd.,
Unit -2, Fountayne Business Centre
Broad Lane, Tottenham
London N15 4AG





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**From:**
**SUB CO STAFF & SERVICE USERS**

WHEN WORDS SEEM SO INADEQUATE
IT`S HARD TO MAKE A START
IN TELLING A BEREAVED PERSON
THE SORROW IN YOUR HEART
AND THOUGH THE FEELING`S NOTHING LIKE
THE GRIEF YOU HAVE TO BEAR
IT HELPS TO KNOW THAT OTHERS
WILL UNDERSTAND AND CARE
SO COUNT YOUR TEARS AND MEMORIES
FOR THEY WILL NEVER DIE
AND GRIEF WILL GET MUCH EASIER
AT TIMES GOES PASSING BY

49 Plashet Road
London E13





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி செல்லம்மா சம்பந்தன் அவர்கள்



மண்ணில்
**20.10.1938**

விண்ணில்
**27.05.2010**

திருமதி செல்லம்மா சோமஸ்கந்தமூர்த்தி (I.T.சம்பந்தன்) அவர்கள் 27.05.2010 அன்று இயற்கை எய்திய செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த துக்கமும் அடைந்தோம்.

அன்னார் தமிழர் வீட்டு வசதிக் கழக குடியிருப்பாளர் சங்க தலைவர் திரு சோமஸ்கந்தமூர்த்தி (I.T.சம்பந்தன்) அவர்களின் அருமை மனைவியாவார்.

தாயகத்தில் எம்மவர்களின் துயர் துடைத்து புனர்வாழ்வு அளித்து வந்த தமிழர் புனர்வாழ்வு கழகத்திலும் மற்றும் பல சமூக அமைப்புகளிலும் செயற்பட்டு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

புலம் பெயர் வாழ்விலும் தனது கணவரின் சேவைகளுக்கு மிகவும் உறுதுணையாக இருந்தவர்.

இவருடைய சேவை இயற்கையால் துண்டிக்கப்பட்ட நிலையில் அவருடைய ஆத்மா சாந்தியடைய கழகத்தின் சார்பிலும் அதன் குடியிருப்பாளர் சங்கத்தின் சாரிபிலும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கெர்கிண்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவர்தம் கணவர், மக்கள் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**தமிழர் வீட்டு வசதிக்கழகம், தமிழர் வீட்டு வசதிக்கழக குடியிருப்பாளர் சங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருமையான மனுஷி

அவ எனது நண்பர் சம்பந்தனின் மனைவி. கோயம்புத்தூரில் எனது மனைவியின் சகோதரியின் வீட்டிலிருந்து தனது படிப்பை மேற்கொண்டிருந்த ஞானத்தின் தாய்.

இவ்வளவும் தான் நான் அவரைப்பற்றி, இந்தியாவிலிருந்து இங்கிலாந்து வரும் வரை அறிந்திருந்தது. நான் இந்தியாவிலிருந்தவரை அவரை நான் அதிகம் சந்தித்ததோ, உரையாடியதோ இல்லை.

அவ இங்கு இங்கிலாந்து வந்து சேர்ந்த பிறகு தான் அவவுடன் ஓரளவு நான் நெருங்கிப் பழக முடிந்தது. ஆனால் அவ எனது மனைவி யுடனும் பிள்ளைகளுடனும் முக்கியமாக எனது மனைவியின் தாயார் எனது மாமியாருடனும் ஏற்கனவே பரிச்சயமானவ.

அவ வருத்தக்காரி என்பதும் மருந்துகள் பல நாளொன்றுக்கு எடுப்பவ என்பதையும் நான் அறிந்திருந்தேன். ஆனால் நான் அவரை நேரில் பார்த்த போதும் அவவின் முகத்தில் தோன்றிய பொலிவும் கள்ளங்கபடமற்ற வாய் நிறைந்த சிரிப்பும் நெற்றி நிறைந்த திருநீற்றுப் பூச்சும் அவற்றையெல்லாம் பொய்யாக்கி விட்டிருந்தன.

நான் பல தடவை நண்பர் சம்பந்தனை நாடித்தொலைபேசியில் வீட்டுக் கழைத்த போதெல்லாம் அதிகமாக குரலைக் கேட்டு விட்டு யார் மைனாக்கனின்ற அப்பாவோ? என்று உரிமையுடனான உறவை வெளிப் படுத்தும் வெளிப்படையான உரத்த குரலில் கேட்கும் போது எனக்கு மிகவும் மனதுக்குச் சந்தோசமாக இருக்கும். தன் வருத்தத்தையும் மீறி பிறருக்கு உற்சாகமளிக்கும் அபூர்வமான குணம் எல்லோருக்கும் அமைவதில்லை.

ஆகவே தான் எனது அன்பு நண்பரின் மனைவியை, ஞானத்துக்கும் அவரது சகோதரர்களுக்கும் அம்மாவை என்னைப் பொறுத்த வரை நான் ஒரு அருமையான மனுஷியாக என் மனதில் பதிய வைத்திருக்கிறேன்.

அவருடைய ஆத்மா சாந்தியடைய நானும் எனது மனைவி மக்களும் பிரார்த்திக்கிறோம்

**மனோகரன் மயில்வாகனம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்வாழ்க்கைச் சிறப்பு

எங்கள் அன்புக்குரிய பத்திரிகையாளர் தம்பி ஐ. தி. சம்பந்தனின் பாரியாரை இழந்து விட்டோமென்று நண்பர் கலாநிதி பொன் பாலா அவர்கள் தொலைபேசியில் சொல்ல அதைக்கேட்டு நானும் என் மனைவியார் டாக்டர். சீதாதேவியும் சில மணிகள் திகைப்பில் ஆழ்ந்துவிட்டோம். பின்னர் எம் ஈலாப் இலக்கிய நண்பர்களுக்கு அறிவித்தோம். அவர்களும் தங்கள் சொல்லொணாக் கவலையை எமக்குத் தெரிவித்து உள்ளனர். சம்பந்தனின் சுடரொளிச் சஞ்சிகையின் நிர்வாகியாகக் கடமையாற்றியவர் திருமதி செல்வதி. அவர் ஒரு பட்டதாரியும், நடைமுறைக் கணக்காளரும் கூட. பலகாலம் நோய்வாய்ப்பட்டிருந்தும் அவர் தன் கணவருக்குச் சகலவித ஊக்கமும் அளிக்க அவர் இவருக்குத் தானாகவே சமைத்து உணவூட்டுவதுமாக பலவருடம் ஒருவரை ஒருவர் பார்த்து வந்தவர். மகன்களும் மருமகள்மாரும் பக்கத்தில் இருந்தும் இவர்கள் அன்னியோன்யமான காதல் சோடியாக இல்வாழ்க்கை நடத்தியவர்கள்.

இப்போது தம்பி சம்பந்தனுக்கும் அவர்களின் அன்பு மக்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம். திரு. சம்பந்தனும் தம் மனைவியாரின் கடமைகளைத் தைரியமாக நடத்தி முடித்து, இயல்பு நிலைக்கு எவ்வளவு கெதியில் திரும்ப முடியுமோ அவ்வளவு கெதியாகத் திரும்ப வேண்டும் என நாங்கள் எல்லோரும் பிரார்த்திக்கிறோம்.

திருமதி செல்வதி சம்பந்தன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய என் குடும்பத்தினரும், ஈலாப் இலக்கிய நண்பர்களும் ஆண்டவனை வேண்டி நிற்கிறோம். வணக்கம்.

**பேராசிரியர் கோபன் மகாதேவா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இழப்பு கவலைக்கு உரியது

திரு. ஜ. தி. சம்பந்தன் அவர்களுக்கு,

அன்பரே! எனது மனத்தாங்கலுடனான அனுதாபத்தைத் தெரிவிக்கிறேன். மிகவும் கவலைப் படுகிறேன் "தினக்குரல்" பத்திரிகைமூலம் தங்கள் ஆருயிர்த் துணைவியாரின் பிரிவு பற்றிய தகவலைப் பார்த்தேன். மனைவியையோ அல்லது கணவனையோ இழப்பது உறவினர்களின் இழப்புக்களில் மிகவும் வேதனைக்குரியதாகும். இதை நான் எனது அனுபவத்திலிருந்து உணர்கிறேன். தனிமை வாட்டும் என்பதையும் நான் நன்கறிவேன்.

தங்கள் துணைவியார் செல்வதி அவர்கள் செல்கதியாகி முத்திக்கே சென்றிருப்பார். "சுடரொளி"யை நடத்துவதற்குத் தங்களுக்குப் பக்கபலமாக இருந்தவர். அதனால் அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்றாக உள்ளது.

எல்லாம் இறைவன் செயல். ஆறுதல் அடைக.

**டாக்டர் க. வைத்திலிங்கம்**

## நித்தியானந்தன் (நித்தி) – சென்னை

அன்பின் திரு. சம்பந்தன் அவர்ளுக்கு

தங்களின் இனிய துணைவியாரின் மறைவுச் செய்தியைக் கேள்வியுற்று மனம் மிக வருந்தினேன். ஒரு இனிய கணவராக நீங்கள் அவரிடம் எவ்வளவு அன்பாக இருந்தீர்கள் என்பதை நான் கண்கூடாகக் கண்டிருக்கிறேன். அவரின் இழப்பு பேரிழப்பேயாகும். நானும், மீனாவும் உங்களின் துயரில்பங்கு கொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளர்ச்சிக்கு ஆற்றிய சேவை

எம் அன்புக்குரிய பத்திரிகையாளர் திரு. சம்பந்தன் அவர்களின் பாரியாா திருமதி. செல்வதி சம்பந்தன் அவர்கள் சடுதியாக இயற்கை எய்தியதையிட்டு நானும் என் பாரியாரும் ஆழ்ந்த கவலையில் உறைந்துள்ளோம்.

அன்னார் சுடரொளியின் வளர்ச்சிக்கு ஆற்றிய சேவையை நாம் அறிவோம். பிள்ளைகளையும், குடும்பத்தையும் சீராக வளர்த்து உயர்ச்சிக்குக் கொண்டு வந்த பெருமை தங்கள் பாரியாரின் பெருமையல்லவா? அதையிட்டுப் பெருமையடைய வேண்டியவா நீங்கள் மட்டும்தான்.

இனி, நீங்கள் அன்னாரின் ஈமக் கடமைகளைச் செவ்வனே செய்து முடித்து, அன்னாரை நினைத்து, அவர் வழி நின்று, அதில் இன்பங்கண்டு, அதனால் சாந்தி பெற்று, ஆண்டவன் பெருமை பேசி, மாண்புடன் வாழ வேண்டி எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி நின்று துதிக்கின்றோம்.

**திரு. கா. விசயரத்தினம்**

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Tribute to
## Mrs Selavi Thirugnanasambanthar Wife of IT Sambanthar

-

Was an unassuming lady who was the driving force behind IT
.

She was a well educated person who held a responsible govt service post in Jaffna. She excelled in her career and also continued in her home duties caring for IT and their 3 sons who will definitely miss her .She was instrumental in IT getting to where he is today- a well respected figure in the Tamil community working tirelessly for the Tamil cause through SUDAROLI and through his various involvements with the Tamil Diaspora.

When I was in Colombo in1991 on a holiday I met Selavi who had been displaced internally in Mannar and had been suffering for about a year in a detention camp. She told me about the suffering she and her sons endured and through her description I could picture the suffering of the Tamils in our homelands. She was suffering from malnutrition ,.

She always wished well and prayed for the our bretheren who are suffering in the Tamil homelands and wanted peace and a land to call as our own in North and East.

IT was a dutiful caring husband and looked after her very well in her ailing last few years. My wife and I always noticed how affectionately IT served her meals and calling her AMMA and taking care of her needs lovingly.

May her Soul Rest in Peace

Om Shanti

**Dr STS Somasegaram**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Tribute to Mrs. Sellammah Sampanthan.

Mrs. Sellammah Sampanthan was a great lady. She was actively involved in various activities relating to the betterment of the Tamil Community. The service she rendered to the Tamil Community is undeniable and cannot be forgotten. It is pitiable that the present generation of the Tamil Community is very reluctant to recognise the contribution and dedication of these people who have been working for the welfare of Tamils for several decades. Mrs. Sampanthan is one of the victims of such ignorant people.

I have been closely working with her husband, I.T.Sampanthan, and his family since 1977. Soon after the 1977 ethnic riots, the Tamils Refugees Rehabilitation Organisation was formed under the leadership of K.C.Nithiyananda, a well-known trade unionist, prominent social worker and a leading Tamil citizen. Mrs. Sampanthan worked closely with the TRRO from its inception. She tirelessly provided service to the TRRO to document the atrocities committed against Tamils during the 1977 riot. Subsequent to these riots the Sri Lankan Government appointed the Sansoni commission to investigate matters of violence perpetrated against the Tamils. The TRRO was at the forefront to mobilise the victims of violence to give evidence before the Commission. The TRRO played a vital and historic role in this context. Mrs.Sampanthan s diligent documentation and attention to detail was of enormous help to MR.K.C.Nithiyananda and K.Kanthasamy to fulfil the task of the TRRO.

When the Prevention of Terrorism Act (PTA) was introduced in July 1979, Mr. I.T.Sampanthan was taken into custody; Mrs. Sampanthan suffered immensely. In July 1979 when the Movement for Inter-Racial Justice and Equality (MIRJE) was formed in Colombo and Jaffna to launch a campaign for the repeal of PTA, Mr and Mrs. Sampanthan worked closely with MIRJE, Jaffna branch. Due to the 1983 ethnic riots and violence in throughout Sri Lanka, Tamil public servants and employees were displaced to Jaffna. Mr. and Mrs. Sampanthan, with the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

support of MIRJE and TRRO, initiated the organisation "The Coordinating Committee for Displaced Employees" . This organisation set up an office on the Stanley Road, Jaffna, and functioned effectively for many years. During its existence this organisation did massive amounts of work for the welfare of displaced Tamil employees.

Mrs. Sampanthan was closely also associated with the THEEPAM INSTITUTE, formed by Mr. K. Kanthasamy, to document and research Tamil affairs. Mrs. Sampanthan contributed to the Theepam institute in numerous ways. When Saturday Review News Paper was published in Jaffna, Mrs.Sampanthan extended her support for promotion of the newspaper, which campaigned against the violation and abuses of the human rights of Tamils in Sri Lanka.

Mrs. Sampanthan was educated at the Jaffna College which was always considered an elite and prestigious educational institution. At that time Jaffna College had prepared students to sit for examination conducted by the University of London. She graduated from the University of London. She held a high post in the Ceylon Transport Board (CTB) and she gave up this comfortable existence to work for the welfare of the Tamil Community. She has led an honourablelife and always remained sincere, humble and modest.

It is very rare to find such people like Mrs. Sampanthan. She is a classic example for others those who are in public life, and especially for those who are working towards liberation of the Tamils. The passing of Mrs. Sampanthan is an irreparable loss to the Tamil Community. This is my tribute to Mrs. Sellammah Sampanthan. This is the time I have to console her affectionate husband Mr. Sampanthan, their children and members of their family

**N.Kandasamy**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமதி செல்வதி சம்பந்தன் அவர்களது ஆத்மா சாந்தியடைக

சுடரொளியின் சுடராய், இடம் பிடித்துச்செல்லும்
இடமெலாம் இணையான துணையாக வாழ்ந்த

மடமாது செல்வமதி தன் உடல் நீத்து
விடமுண்ட கண்டன் கழல் விரைந்து சென்றனள்

குணமான தாயாகக் குலமான தெய்வ வாழ்வுடன்
இனமான தமிழின் துன்பச்சுமை சுமந்து

மணமாகிய சம்பந்தன் மனவழியில் மகிழ்ந்து
தனமான சுடர்ஒளி சஞ்சிகைக்கு உதவி

கனமான மனைவியாக மகிழ்ந்த வேளையில்

விதியின் சதியால் விளைந்த துன்பங்களால்
பதியின் துணையுடன் பலகாலம் வாழ்ந்து

ஞாலத்தில் பெரியதன் கணவனின் பராமரிப்பையும்
சீலத்தில் சிறந்த செல்வதி மஞ்சன் குங்குமக்

கோலத்துடன் குலதெய்வம் தாள் சேர்ந்தாள்
ஓலமிடும் கணவர்க்கும் பிள்ளைகட்கும் உறவினர்க்கும்

சாலவே ஆறுதல் கூறி செல்வதி அம்மா ஆத்மா
காலமெலாம் ஈசன் கழலடியில் சாந்தி அடைக

ஆறுதல் கூறும்
பா.வசந்தன் குருக்கள்
ஆதித்தக்குருக்கள்
ப. கணேசக்குருக்கள்
சோ.பிரவணவ சர்மா

தேவஸ்தான நிர்வாகம்
கற்பக விநாயகர் கோவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# நல்(ல) கதிக்கு உரியவராய் வாழ்ந்த செல்வதி அம்மையார் அவர்கள்

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்ல.்.துறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே

திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச்செய்த மேற்படி தேவாரம் தெரிவிக்கின்ற பாங்கில் செல்வதி அம்மையார் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்தவர். நாள்தோறும் இறையினை எண்ணியவர். எனவே நல்ல கதிக்கு உரியவர் என்பதே நிச்சயம்.

அம்மையார் அவர்களது குடும்பத்தினர் அனைவருடனும், அவரது குடும்பத்தலைவர் திரு ஐ.தி சம்பந்தன் அவர்கள் மூலம் ஏற்பட்ட அறிமுகம் அன்புறவாக நிலைபெற்றிருப்பதற்கு மூலகாரணம் அம்மையார் என்மீது காட்டிய தாய்மை அன்பும் அவரது கள்ளமற்ற வெள்ளை உள்ளமுமே.

தற்காத்துத் தற்கொண்டான் பேணிச்
சொற்காத்துச் சோர்விலாள் பெண்'

திருக்குறளுக்கமைய இல்லறத்தை நல்லறமாக்கிச் சிறப்பித்தவர். அம்மையார் அவரது அன்புக்கணவர் திரு ஐ.தி.சம்பந்தன் அவர்கள் இலங்கையில் வாழ்ந்த காலங்களில் அவருடைய பொதுநலப்பணிகள் தொய்வின்றி நடைபெற ஆதார சக்தியாக விளங்கியவர். திருமதி செல்வதி சம்பந்தன் அவர்கள் குறிப்பாக 1982இல் திரு ஐ.தி.சம்பந்தன் அவர்கள் உருவாக்கிய சுடரொளி அச்சகத்தின் அச்சாணியாக விளங்கியவர் செல்வதி அம்மையார் அவர்களே. இந்த அசச்கத்தில் அச்சிடப்பட்டு நல்லை ஆதீனத்தின் வெளியீட்டு விழா மூலம் தமிழினம் பெற்றுக்கொண்ட 'தமிழ் தந்த தாதாக்கள்' என்னும் நூல் தொடர்பில் அம்மையார் ஆற்றிய பணிகள் இன்றும் என் நினைவுகளில் நிலைபெற்றுள்ளன.

திரு ஐ.தி.சம்பந்தன் அவர்கள் லண்டனில் புலம் பெயர்ந்த பின்னர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது மூன்று புதல்வர்களையும் நல்லவர்களாகவும், வல்லவர் களாகவும் வளர்த்தெடுத்த அன்னையின் சிறப்பைப் புதல்வர்களின் நல்வாழ்வே பறை சாற்றுகின்றன.

லண்டனில் அம்மையார் அவர்களை நோயுற்றவராகக் கண்டபோது இதயம் சோகத்தால் கனத்தது. ஆனால் அவரது அன்புக்கணவரும் அன்புப்புதல்வர்களும் அம்மையாருக்கு ஆற்றிய பணிவிடைகளைக் கண்ணுற்ற போது இந்த அவசர யுகத்தில் சற்று வித்தியாசமாகவே தென்பட்டது. அம்மையார் வாழும்போதே அவருக்குச் சேவையாற்றும் பாக்கியம் பெற்ற அன்புக்கணவரும், அன்புப்புதல்வர்களும் இந்த வகையில் பாக்கியசாலிகளே.

இந்த அன்னையின் தாய்மை அன்புக்குரியவனாகத் திகழ்ந்தவன் என்ற வகையில் நானும் பாக்கியம் பெற்றவன் என்ற உணர்வில் உளம் நிறைகின்றேன்..

அன்பன்
இ.முருகானந்தன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்நாடு நிறுவனத்தின்
# அஞ்சலிகள்

கண்ணில் பதிந்தஎம் வண்ணவொளி-இன்று
காணாமல் சென்றதே எங்கு அம்மா!
விண்ணில் மறைந்ததேன் சொல்லுமம்மா-அந்த
விந்தை இறைவனே அழைத்தனனோ?
எண்ணிப் பதறுதே எங்களுள்ளம்-உன்னை
ஏந்தி வளர்த்தவர் வாடுகிறார்!
மண்ணில் புரளுதே பிள்ளைகளே-அம்மா
வாவா என்றுமே அலறுகிறார்!

கர்ம வீரராம் சம்பந்தர்-அவர்
கக்கம் இருந்தனை செல்லம்மா
தர்மம் கடவுள் இறைபக்தி-கொண்ட
தங்க மாதென மிளிர்ந்தனையே!
மர்மம் நிறைந்ததே வாழ்க்கையென்று-நீ
மறைந்தனை யாயினும் தமிழுலகில்
சர்வம் உழைத்திடும் சம்பந்தர்-சொல்லும்
சாதனை முழுவதும் நீயிருப்பாய்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

நம்நாடு பத்திரிகையின் இலண்டன் பதிப்பு ஆசிரியராய் இருந்தவரும், இலண்டன் சுடரொளி ஆசிரியரும், சமூக-அரசியல் பணியாளரும் ஆகிய திரு.ஐ.தி.சம்பந்தன், அவர்தம் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அனைவரோடும், அவர்தம் குடும்பவிளக்கு செல்லம்மா அம்மா அவர்களின் பிரிவுத் துயரில் நாமும் பங்குகொண்டு எங்கள் கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.-நம்நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உளங்கனிந்த நன்றிகள்

ஒரு குடும்பத் தலைவி நித்திரையில் நீண்ட பயணத்தை மேற் கொண்டு எல்லோரையும் துக்கத்தில் ஆழ்த்திய திருமதி செல்வதி சம்பந்தன் சிவபதம் எய்திய செய்தி அறிந்து விரைந்து உதவிய அயலவாகள்,எமது குடும்ப நண்பர்கள் திரு. கு.சிதம்பரப்பிள்ளை, கவுன்சிலர் போல் சத்திய நேசன், சைவமுன்னேற்றச்சங்க தலைவர் திரு.வாமானந்தன் ,திரு வைத்தியநாதக்குருக்கள், சுவர்ணா நவரத்தி னம், திரு.ஆவரங்கால் சின்னத்துரை, திரு கஜன், திரு.செந்திநாதன் உடபட மற்றைய அன்பர்களுக்கும, இறுதிச் சடங்குகளில் கலந்து அனுதாபம் தெரிவித்த உற்றார் உறவினர், நண்பர்கள், எமது ஊரவர்கள், மற்றும் எல்லோருக்கும், அஞ்சல் உரை நிகழ்திய பிரமுகர்களுக்கும், அந்தி யேட்டி பூசைகளிலும், பிரார்த்தனையிலும் கலந்து கொண்டவர் களுக்கும், யாழ்ப்பாணத்தில் எமது கந்தர்மடம் இல்லதிற்குச்சென்று அனுதாபம் தெரிவித்த உற் றார். உறவினர், அயலவர் அனைவருக்கும், மரணச்செய்தியை உடன் வெளியிட்ட ஜ.பி.சி, சூரிய வானொலி, புதினம், வீரகேசரி, தினக்குரல் ஆகிய ஊடகங்களுக்கும். இம்மலருக்கு ஆக்கங்களைத் தந்தும். அனுப்பி யும் உதவிய பிரமுகர் களுக்கும், இம்மலரைச் சிறப் பாக அமைத்துத் தந்த கலாநிதி பொன் பாலசுந்தரம் அவர்கட்கும், மலரை சிறப்பாக அச்சிட்டு உதவிய ஜே.ஆர். அச்சக நிறுவனத்தினருக் கும் இங்கே குறிப்பிடாமல் பலவழிகளிலும் எமக்கு உதவிய அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

இங்ஙனம்

கணவன். மக்கள். மருமக்கள், பேரப்பிள்ளைகள்

15 Rutland Road
London E7 8PQ

4 குமாரசாமி வீதி
கந்தர்மடம், யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Design & Printed at JR Print (UK) 020 8503 6643